உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

திருவெங்கைக்கலம்பகம்.

திருவெங்கையுலா.

இவை,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

ஷை சுவாமிகளாலும்

காணியம்பாக்கம் முருகேசமுதலியார் குமாரர்

சண்முகமுதலியாராலும்

சென்னை:

கலாரத்நாகர அச்சியந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

பராபவஸு ஆவணிமீ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைமான்மியம்.

நடுநாட்டிலே, * துறைமங்கலத்திலே, முந்நூறுவருடங்கட்குமுன்னே, பண்டகுலத்திலே, வல்லகோலாதிபதியென்னும் பட்டப்பெயர்பெற்றுக் குறுநிலமன்னவராய் இலிங்காரெட்டியார் என்பவர் ஒருவரிருந்தார்.

அவர் கல்வியறிவொழுக்கங்களினும், குருலிங்கசங்கமபத்தியினும், வீரசைவாநுஷ்டானத்தினும் மிகச் சிறப்புற்றவராய் வாழுநாளில், பிரதோஷகாலத்திலே, சிவதரிசனஞ் செய்தே போசனஞ் செய்யவேண்டுமென்னும் நியமமேற்கொண்டு, தமது நகரத்திற்கும் விருத்தாசலத்திற்கும் சுமார் நான்குகாவதமிருக்கவும், அத்தலத்தில்வீற்றிருக்கும் பழமலைநாதரிடத்தும் பெரியநாயகியம்மையாரிடத்தும் அத்தியந்த பத்தியுடையராய்ப் பிரதோஷகட்டளையேற்படுத்தி, தமது அருந்தவத்தாலுதித்த அண்ணாமலைரெட்டியாரென்னும் சற்புத்திரரோடு, அப்புண்ணியகாலந்தோறும் தவறாமற்சென்று, தரிசனஞ்செய்துவந்தார்.

அக்காலத்திலே ஒருநாள், பிரதோஷதினத்திலே, தரிசனத்தின்பொருட்டுத்தமதுபுத்திரரோடுபுறப்பட்டுவருங்கால், பேராறு என்கிற வெள்ளாறு இருகரையினும்பெருகி ஓடமுத

---

* இது வாலிகண்டபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ளது.

லியவும் செல்லுதற்கும் இடங்கொடாதிருப்பதைநோக்கி, இலிங்காரெட்டியார் மனம் நைதலோடு, "யாங்கள் சிவபெருமானுக்குத் தொண்டராயின் இந்நதி வழிவிடுக; இன்றேல், இதிலிறப்பதே தகுதி" எனப்பிரதிஞ்ஞைசெய்துகொண்டு, துணிவோடு அந்நதியிலிறங்கலும், அது சிவபெருமான்திருவருளால் வழிவிடக்கண்டு, "எளியேங்களிடத்தும் எம்பெருமான்றிருவருள் இருந்தவாறு என்னே!" என்றுவியந்து, புத்திரரோடு சென்று, பழமலைநாதரையும் பெரியநாயகியம்மையாரையும் தரிசித்து, மனமுருகிப் பலவாறு துதித்து, தமக்குச் சிவபெருமான்பாலித்த திருவருளைச் சிந்திக்குந்தோறும் பேராநந்த முடையவராய், அத்தலத்திலேயே தங்கினர். அன்றிரவிலே, பழமலைநாதர் அவர்கள் சொப்பனத்திலே, ஒரு சிவனடியார் போலத் தோன்றி, "நீங்கள் ஏன் இவ்வாறு கஷ்டத்தை யடைகின்றீர்கள்; யாம் உங்கள் ஆளுகையிலமைந்த * திருவெங்கை நகரத்திலே இன்னதானத்திலே திருவுருக்கொண்டு வீற்றிருக்கின்றோம்; ஆலயமமைத்து வழிபடுவீராக; அமைக்குங்கால், வடதேசத்திலிருந்து க்ஷாமத்தினால்மெலிந்து சில சிற்பர்கள் வருவார்கள்; அவர்களாலே திருப்பணி பூர்த்தியாகும்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர்.

அவ்வாஞ்ஞையின்படியே திருவெங்கைநகரத்தை யடைந்து, குறிப்பித்த ஸ்தானத்திலே பரிசோதிக்க; அங்கே பூமிக்குள், ஒருசிவலிங்கமும், அம்பிகைமுதலிய சில மூர்த்தங்களும் இருக்கக்கண்டு அளவிடப்படாத ஆனந்த சாகரத்தின் மூழ்கி, திருவருளைப்பரவி, அப்பொழுதே சுவாமிக்குப் பழமலைநாதரெனவும், தேவிக்குப் பெரியநாயகியம்மை யெனவும் திருநாமந்தரித்து, சிறிய ஆலயம் அமைத்து, நித்தியபூசை

---

* இது வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்திலே திருவெங்கனூரென்ன வழங்குகின்றது.

ஏற்படுத்தினுர். அந்நாளிலே, சிவாஞ்ஞையின்படியே வடதேசத்திலிருந்து சில சிற்பர்கள்வர ; அவர்களுடைய நூலுணர்ச்சிமுதலிய உத்தமகுணங்களனைத்தையும் நோக்கி, அதிசயித்து, வேண்டும் பொருள்களை வெறுக்கக்கொடுத்து, அவர்களை அத்தலத்திற்றுனே குடியேற்றி, திருப்பணிகளை யியற்றிவருங்கால், இலிங்காரெட்டியார் சிவலிங்க ஐக்கியமாய்விட்டமையால், அண்ணுமலை ரெட்டியாரே தலைவராகவிருந்து, அவரினும் மிகச்சிறப்பாக நடத்திவந்தார்.

ஒருதினத்திலே, அச்சிற்பர்களுக்குத் தலைவனுனவன் கருப்பக்கிருகத்தின்கீழே கட்டப்பட்டிருக்கும் சாரத்தின்மேலிருந்துகொண்டு, வேலைக்காரனை வெற்றிலைமடித்துக் கொடுத்தற்பொருட்டு அழைக்க ; அவன் அத்தருணம் அங்கில்லாமையால் அண்ணுமலைரெட்டியார் அவ்வேலைமுட்டுப்படாவண்ணம் தாம் கீழிருந்து, மடித்துக்கொடுத்தனர். அச்சிற்பன் சாரத்தினது மறைப்பால் இன்னுரெனத்தெளியாது, இடதுகரத்தால் வாங்கி யுட்கொண்டபின் உண்மைதெளிந்து, ஓகோ ! என்செய்தோமெனப் பெரிதும் இடரின்மூழ்கி,அபசாரஞ்செய்த அந்தக் கரத்தைத்துணிக்க எத்தனித்தலும் ; ரெட்டியார் அவனை நோக்கி, "கரத்தைத்துணிப்பது தகுதியன்று ; அக்கரத்தைக்கொண்டு உனக்குத் தெரிந்துள்ள அரியவேலைகளெல்லாம் அமைய இத்திருப்பணியைப் பூர்த்திசெய்யின் என்றும் நின்பெயர் நிலைபெறுவதன்றியும் நினக்கு எய்துதற்கரிய சிவகதிபெறுதற்கும் இதுவே ஏதுவாகும்." என்று வற்புறுத்தினுர். சிற்பனும் இவ்வுத்தமோத்தம உறுதிவாக்கியத்தைக் கேட்டு, பெருமகிழ்சிறந்து, முன்கட்டிய கருப்பக்கிருகத்தை முற்றும் பிரித்துவிட்டு, இத்திருப்பணிபோல யாண்டுமில்லையென யாவருங் கொண்டாட அதிவிசித்திரமாக அமைத்துமுடித்தனன். கண்டவர் கண்களிகூரப்பெற்றுர்கள்.

அதுகண்ட அண்ணுமலேரெட்டியாரும் அகங்களிகூர்ந்து, அர்த்தமண்டபமுதலிய திருப்பணிகளை ஒருவாறுமுடித்து, * சாலிவாகன சகாப்தம் - கருசரு ௵ ஆகிய உருத்திரோற்காரி ௵ வைகாசிமாசத்தில் பூர்வபக்ஷ துவாதசியும் அஸ்த நக்ஷத்திரமுங்கூடிய குருவார சுபதினத்திலே, ஆபதோத்தாரண சிவாசாரியார் குமாரர் பிழைபொறுத்த சிவாசாரியாரால், விநாயகர்முதலிய சகல மூர்த்தங்களுடன் பழமலேநாதனையும் பெரியநாயகியம்மையாரையும் பிரதிஷ்டை செய்வித்து, கும்பாபிஷேகமும் நடத்துவித்து ; பின்னும் வேண்டிய பெரும்பொருள் செலவிட்டு மஹாமண்டபம் நிருத்தமண்டபம் இரண்டு பிராகாரம் கோபுரம் திருமதில் திருக்குளமுதலிய திருப்பணிகளைக் குறைவற இயற்றிக்கொண்டிருந்தனர்.

அந்நாளிலே, சிவப்பிரகாச சுவாமிகள் தக்ஷிண யாத்திரையை விரும்பிச் சகோதரர்களோடு காஞ்சியினின்றும் புறப்பட்டு, திருவண்ணுமலே முதலிய திவ்விய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வரும்போது, துறைமங்கலத்தை யடைந்து, ஒரு நந்தனவனத்திலே சிவபூசை செய்துகொண்டிருந்தார். ரெட்டியார் சுவாமிகளுடைய அற்புதமகிமைகளைக் கேள்வியுற்று அங்கடைந்து, தரிசித்தமாத்திரத்திலே அவர்களிடத்தே அநுக்கிரகம்பெறவிரும்பி அடிமைபூண்டு, "சுவாமி! தேவரீர்

---

* இது மேற்படி அண்ணுமலேரெட்டியார் சந்ததியாராய்த் தற்காலத்திலுள்ள சிவநேசமிக்க விருத்தாசலரெட்டியார் முன்னிலேயில் அத்தலத்திலுள்ள சிலாசாசனத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது ; ஆனல், அண்ணுமலேரெட்டியாரே திருப்பணி முடித்துக் கும்பாபிஷேகம் நடத்துவித்திருக்கவும் அவர்பிதா நடத்துவித்ததாக அச்சாசனத்திலிருப்பது அவர் முதலிலே திருப்பணி தொடங்கியமைநோக்கிக் குறித்திருக்கலாம்.

இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்" என்றுபிரார்த்தித்து, உடன்படுத்தி, தங்கள்குருவாகிய சென்னவசவையர் மடத்திற்கு மேற்றிசையில் ஒருதிருமடங்கட்டி, அதில் சுவாமிகளையெழுந்தருளுவித்து, அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத் தொண்டராயமர்ந்திருக்க; சுவாமிகள் அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு, இரண்டுவருஷம்வரையில் அங்கேயேவீற்றிருந்து, பின்பு தக்ஷிணதேசஞ்சென்றுயாத்திரையை முடித்துக்கொண்டு, மீட்டுந் துறைமங்கலத்தையடைந்து, அண்ணாமலைரெட்டியாரால் திருவெங்கையிலே தம்பொருட்டுக் கட்டுவிக்கப்பட்ட திருமடத்திலே வீற்றிருந்துகொண்டு அத்தலத்தைச்சுட்டித் தாமருளிச்செய்த **திருவெங்கைக் கோவை திருவெங்கைக்கலம்பகம் திருவெங்கையுலா திருவெங்கையலங்காரம்** என்னும் நான்கு பிரபந்தங்களுள்ளே, உலாவில்,(௬௪) வது கண்ணிமுதல் (௬௭) வது கண்ணிவரையும் அண்ணாமலைரெட்டியார் பெருமையையும் திருப்பணியி னருமையையும் பாராட்டியருளினமையேயன்றிக் கோவையினும் "வல்லகோனுக்கு வல்ல அண்ணாமலையார் கட்டுகோயில்" எனவும், "கருப்ப இல்லிற்கிணையில்லையென்னும் திருவெங்கை" எனவும் சிறப்பித்து, அப்பிரபந்தங்களைச் சந்நிதியிலரங்கேற்றி, சின்னாள்வசித்து, சிதம்பரத்தை யடைந்தருளினார்.

அண்ணாமலைரெட்டியாரும் பிரிவாற்றாமையால் உடன்சென்று, சிற்சபாநாயகரையும் சிவகாமி யம்மையையும் தரிசித்து, அங்கே சுவாமிகள் எழுந்தருளியிருத்தற்கு ஒரு திருமடங்கட்டுவித்து, சிலநாள்வாசஞ்செய்து, அநுமதிபெற்றுச் சென்று, துறைமங்கலத்திலிருந்துகொண்டு, சிவப்பிரகாசசுவா

மிகள் தரிசனத்தின்பொருட்டு எத்தலத்திற்கெழுந்தருளினும் தாமும் அத்தலங்கடோறுஞ்சென்று, தரிசித்துமீளுவர். அன்றியும், அன்புமேலீட்டால் தாம் அங்கே ஒரு தூணிலமைத்து வைத்த சிவப்பிரகாசசுவாமிகள் திருவுருவத்திற்கு நித்திய பூசையும், பழமலைநாதருக்கு நித்தியநைமித்திகங்களும் திருவிழாவும் அதிசிறப்பாக நடத்துவித்து, காலந்தோறும் தரிசனஞ் செய்துகொண்டு, திருவருட்குப் பாத்திரராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, சிவலிங்க ஐக்கியமாயினர்.

திருவெங்கைமான்மியம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

பொன்னுலவும் வெங்கைப் புனிதற் கடியேனு
முன்னுங் கலம்பகப்பாட் டோதுகேன்—றன்னைநிகர்
முத்திதரு மன்னோன் முழுதருளி னாற்பூத்த
வத்திதனைக் கண்டவத னால்.

ஒருபோது மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

சீர்பூத்த நிறைமதிமான் றிருக்கரங்கொண் டம்மதியை
யேர்பூத்த சடாமௌலிக் கியையவீர்ந் தனையிருத்தி
மற்றையவோர் பகவுமணி மார்பகத்திற் கிடந்திமைப்பக்
கொற்றவநீ யிருங்கேழற் கோடெனப்பூண் டருளினைகொல்
பூம்புனலோ பொன்முடிக்கட் புல்லோநஞ் சுமிழெயிற்றுப்
பாம்பினமோ கண்டுனது பாணியின்மான் றுவுவதே. 1

இது ஆறடித்தரவு.

காமத்திற் படினுமையாங் கடுநிரயத் திடுவமென
நாமத்திற் படவெமக்கு நவின்றொருவன் றாதாய்நீ
யாமத்திற் றனியிருட்க ணேர்ந்திழைபா லெய்தியதென்.

நீவிர்புல வருந்திலெரி நிரயத்தி லிடுவமெனத்
தேவவெமக் கியம்பினைநீ சிலைவேட னிடும்பிசித
மாவலொடு மிசைந்தவனுக் கருளினைமெய்க் கதியென்கொல்.

ஒன்றொருயிர் தனைச்செகுப்பி னுமைநிரயத் திடுவமென
மன்றறைய வெமக்கியம்பி மைந்தனைமுன் றந்தைதனைக்
கொன்றவரை யுவந்தருளிக் கொடுத்தனைவா னுலகென்கொல்.

இவைமூன்றும் மூவடித்தாழிசை.

எனமிகு வளமுள வியலதி சயமொடு
முனிவரர் பலவகை மொழிதரு புகழினை.
பலகலை வலபுல னிலைமல வலைமலை
சிலரல துலகலை கலர்சொல விலகிலை.

இவையிரண்டும் ஈரடியராகம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

எழிலிகண் படுக்கும் பொழில்புடை சூழ்ந்த
வெங்கையம் பதிவா ழெங்க ணுயக
பழமலை நாதநிற் பரவுவன் விசும்பி
னரையனுக் கரைய னுகுமந் நிலையு
நினைகிலன் றமியேனின்னடி யவர்கட்
கென்று மடியவ னுகு
மொன்றொரு வரமு முதவுதி யெனவே. (க)

இதுஏழடிநேரிசையாசிரியச்சுரிதகம்.

நேரிசைவெண்பா.

எவ்வா றளித்த திமையப் புதுமலைதன்
னெவ்வா விளமை யொருமகளை—யவ்வான்
பரவுதிரு வெங்கைப் பழமலையே நிற்கு
விரவுகிளை யோடும் விழைந்து. (உ)

கட்டளைக்கலித்துறை.

விழக்க மலங்களை மோதிவல் வாளை வியன்படுக
ருழக்க மலங்களை போய்ப்புகும் வெங்கை யொருவவிண்ணோர்
தொழக்க மலங்களை மாமதி வேணி சுமந்தருள்வோய்
பழக்க மலங்களை யான்பவ வேரைப் பறிப்பதற்கே. (௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரந்தபுகழ்த் திருவெங்கைப் பழமலையார் தமைத்துதித் துப் பதத்து மென்பூச், சொரிந்துடனிந் திரந்திடவு மெமக்க ருளச் சிறிதுமுளந் துணிந்தா ரல்லர், திருந்தவையிற் பித்த வென வைதுகல்லா லெறிந்துபொருஞ் சிலையான் மோதி, யர ந்தையின்மெய்க் கதிதருதி யெனக்கேட்போர்க் கன்றியவ ரளி த்திடாரே. (௪)

மறம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அளியாரு மலர்ப்பொழில்சூழ் வெங்கையீச ரம்மலையி லெம் மூர்மான் பிடிப்போ மென்றுங், களியாரும் வேடர்யா மெம்ம கற்குக் கன்னிதனைத் தருகவெனக் கொடுத்த வெட்மை, யெளி யாரென் றெருதூதா மாது வேண்டி யிறைவர்திரு முகமென மற் றொன்று தந்தா, யொளியாம லுரையவன்யா ரியாங்க ளின்னே யுண்மையவன் றிருமுகங்கொண் டெய்து வோமே.

நேரிசைவெண்பா.

மேதகைய * வில்லிறைவன் வில்லிளவல் வல்வீரர்
காதனிக மற்றுங் கருதெவையும் — பாதத்
தொருவிரலாம் வெங்கையர னொன்றுமை யாசைப்
பருவரலாற் காணப் படும். (௫)

மடக்கு. தாழிசை.

படமெத்தமிழுக் குவந்தவிறை விடமெத்தமிழுக் குவந்தவிறை
பண்டங்கரிய வடிவாமன் கண்டங்கரிய வடிவாமன் [யான்
சடையற்படமெம் புயனிசையான் றுடையற்படமெம் புயனிசை
சம்புவனமாக் குணர்வாக னம்புவனமாக் குணர்வாகன்
கடலைக்கலக்கு மலைவில்லா னுடலைக்கலக்கு மலைவில்லான்
கங்கைப்பதியன்பரையானுன் வெங்கைப்பதியன்பரையானு

* வில்லிறைவன் - இராமர். பருவிரலால் என்றும்பாடம்.

னடலைப்புரத்தங்கணையெய்தா னுடலைப்புரத்தங்கணையெய்தா
னன்பினிகழ வணங்கிரே துன்பினிகழ வணங்கிரே. (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏற்றுப் பிறையை யணிந்ததிரு வெங்கை விருத்த கிரி
நாத, ஞற்றுப் பொருளைக் குளத்திலொரு புலவர்க் கழைத்தன்
றருளினேன், சோற்றுத் துறையுந் திருநெய்த்தா னமுமீங்
குடையான் சுழலாமற், றேற்றுப் பசிநோய் தொலைப்பனவன்
றனையே துதியீர் புலவீரே. (அ)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

புண்ணியனம் வெங்கைப் புனிதனயன் மாலெதிரே
யண்ணலரும் பேரொளியா யன்றெழுந்தா னம்மானை
யண்ணலரும் பேரொளியா யன்றெழுந்தா னாமாகிற்
கண்ணி லவரெளிதிற் காணரோ வம்மானை
கண்ணின்றிக் காணுங் கதிரொளிகா ணம்மானை. (கூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்புமே லிருக்கு நாரி யடற்சிலை கொண்ட வெங்கை
யெம்பிரானெடும்போர்செய்வனென்றுதன்னிதயத்தெண்ணி
யம்பின்மே லிருக்கு நாரி யருஞ்சிலை கரங்கொண் டுற்றே
னெம்பெரு வமுதன் றனை யென்செயா னுலகிற் றனே. (க0)

கலிநிலைத்துறை.

தாமங் கமழு மொய்ம்புடை யன்பர் தமியேன்வெங்
காமங் கனலு மனமொடு துன்பக் கடல்வீழ
வேமங் கருதிச் சென்றன ருமையன் றிதுகொண்டோ
வாமங் கலவெங் கைப்பர னேடொன் றுனளே. (கக)

(க0) சிவபெருமானுக்கு அம்பு திருமாலும் நாண் ஆதிசேட
னுமாகலின் அம்பு மேலிருக்கு நாரி என்றும், மன்மதனுக்குஅம்பு
மலரும் நாண் வண்டுமாகலின் அம்பின்மேலிருக்கும் நாரி யென்
றும் முறண்பட விதந்தபடி.

கலிவிருத்தம்.

ஆயிழை மகளிர்வா ழகங்க டோறுமுன்
னீயிரும் பலிகொள நினைந்து வெங்கையிற்
றூயநின் சடையினிற் சோமன் சுற்றியே
யேயினை வெற்றனா யாகி யென்னையே. (கஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றனை முகத்தின் வென்று ளிவளெனும் பகையுட் கொண்
பின்றலி லன்ப ரொன்று பிரிவரொன் றிருந்து வெங்கை [டோ
மின்றிகழ் சடிலத் தண்ணன் மேவலர் போல்வெண் டிங்காள்
வன்றுய ருழக்க வென்மேன் மலிதழல் சொரியும் வாறே. ()

மேற்படிவேறு.

வாசக் கமல மலர்த்திருவே மயிலே யென்கண் மணியேநின்
னுசைக் குமுத மலர்வாயி னமுதம் பெறுதற் கரிதாயோ
வோசைக் கடலைக் கடைந்தகடு வுமிழ விமையோ ரொடும்வெ
யீசற் கபய மபய மென விரிந்தான் மேனி கரிந்தானே. [ங்கை

வண்ணம்.

கன்றுக்கர மலராண்முக விந்துத்தவி சடைமீனிகர்
கண்டத்தணி மணிமாலையள் கயிலையங்கிரியார்
கங்கைச்சடை முடிநேடிய துங்கப்புற வையுநாடுறு
கஞ்சத்திரு வடியீதென நவில்சிலம்படியாள்
வென்றிச்சிலை மதன்வாள்களி னஞ்சைத்தட வுதல்போலமை
விஞ்சப்புனை விழியாளொளி பெருகுசெங்குழையாள்
விம்பப்பிறை யெனநீறிடு சந்தச்சிலை நுதலாடிரு
வெங்கைப்பழ மலைநாயகர் பவனிவந்திடவே
சென்றுற்றன டொழுதாளுமை தங்கப்படு புறநாடினள்
செங்கைக்கவி னுழையீதிவள் பயில்வதொன்றறியான்
சிந்தித்தன ளொருமாதினி யிந்தப்புற முறமானெழி
செங்கைக்கணு மிவரேகொளி னனிசிறந்திடுமே

யென்றித்தகை பலகூறினள் கொங்கைச்சுவ டுறுமார்பினை
யின்பத்தொடு மெதிர்நாடின ளெனையணைந்தருளா
விந்தப்படி தமியேன்முலை சந்தத்திரு மணிமார்பழ
கெஞ்சப்படு கிலர்பாரென மதிமயங்கினளே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

மதிநுதற் பவள வாய்க்கருந் தடங்கட்
குவிமுலைப் பசும்பொற் கொடிதனை யமையாக்
காதன்மீ தூரக் கலவிசெய் திடுவான்
புகும்பொழு தவளொரு பொருமையுட் கிடப்பப்
படர்முதிர் வேனிற் பகற்கொடும் பாலை
நிலத்துநீர் வேட்டோ னீரரி தினிற்பெற்
றுண்புழி யுண்ணு தொல்லையிற் றடுக்குஞ்
செயலென வெமைநீ தீண்டே லென்று
நின்மே லாணை நிகழ்த்திட நீங்கிப்
புணரியுண் டெழுந்த புயனிகர் வளர்குழ
லஃதுணு முகில்போன் றழகுறுங் காறுந்
தீண்டா தொருபூஞ் சேக்கையிற் றுயின்று
மாறு வன்பு வளர்மனத் தவனே
மிளிர்தரு தூர்த்த வேடமா தவனாய்
நீமுன் கற்பு நீங்கா மாதைத்
தருகெனக் கொடுத்துத் தன்பெருங் கிளைஞர்
மான்மீக் கூர வந்தனர் சூழ
வொன்னலர் போல வுடன்றவர்ப் படுத்துக்
களையில்பே ருவகைக் கடல்படிந் தவனே
திருமணக் கோலஞ் செய்துவீற் றிருந்த
வருமகள் கூந்த லையரின் னுருவங்
கரந்துசென் றிரப்பக் களித்தக மணப்பூம்

பந்தரிற் கிளைஞர் பலருங் காண
வரிந்து கொடுத்த வடியவன் ருனே
நின்னொரு விழிசெங் நீர்கொளக் கலங்கித்
தன்னொரு விழிவெஞ் சரத்தினு லிடந்து
சாத்தி மற்றைத் தடங்கணவ் வகைபெற
வின்னமுண் டொருக ணென்றுளங் களித்து
மற்றதுங் கிளைவான் வாளிநட் டவனே
மருவலன் புணர்ப்பான் மாய்ப்பமெய்த் தவன்போல்
வந்தனன் படையான் மார்பிடைத் தாக்கக்
கண்டுட் கடைத்தலைக் காவல னொருவன்
வெகுண்டவற் றுணிப்பான் விரைந்துசென் றெய்த
வாணையாற் றடுத்த வரச ரேறே
பொருகளத் தொட்டலன் புனைநுத னீறு
கண்டுனைப் போலக் கருதிமற் றவனைத்
தன்படை சாய்த்தவன் றன்படை மார்பிற்
ருக்கக் கொடுத்த தளர்விலன் பினனே
வருஞ்சிறு மகனை யரிந்துநிற் கட்டுப்
படைத்துக் களிகூர் பரிவுடை யவனே
கின்சின கரத்து நீக்குபூ மோந்த
மாதுமூக் கரிந்த மலிபெருந் தவனே
துணுக்கென வவள்கை துணித்தகொற் றவனே
சந்தன மாகச் சாத்தநின் றனக்கு
முன்கை தேய்த்து முகமலர்ந் தவனே
செயற்கருஞ் செய்கை செய்தவன் யார்கொல்
பகருதி வெங்கைப் பழமலை நாத
பராபர முக்கட் பகவசங் கரசிவ
கருணு கரதிருக் கயிலை நாயக
வென்றருந் தவர்க ளேத்தும்
பின்றிகழ் சடிலப் பெருந்தகை யோனே. (௧௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பெருந்தகைமை தனக்கன்றி மற்றையபூ வினுக்கிலையென் பெற்றி யன்றே, திருந்துதட மதிற்குவளை குமுதமொரோ ருருப்பினையே சிவண நிற்ப, முருந்துநகை யுமைகணவன் திருவெங்கை யனையாயுன் முகம்பொற் றுள்கை, புனைந்திடுதற் கரவிந்த மொருதாளி னின்றுதவம் புரித றனே. (கஎ)

தாழிசை.

தாராம லிருந்தாரொனை யாளாம லிருந்தார்
தனிவெங்கையை யுள்ளார்மய றவிரும்படி யுள்ளார்
சீராரிசை வண்டேயொழி கிலவேள்கர வண்டே
செறிகின்றிலை குருகேதுய ரறிகின்றிலை குருகே
வாராய்மட மயிலேமிகு தாய்மார்சொலு மயிலே
வானூடெழு மதியேயெனை முனியாதருண் மதியே
யூரார்புகல் வம்பேயென விழியோவில வம்பே
யுனையாயவ ருழையேயென தகலாவிட ருழையே. ()

வஞ்சிவிருத்தம்.

உழையென வெங்கை யுவப்பானூர்
தழலுரு வென்ற தரத்தாலோ
விழவெமை யின்று வெதுப்பாமே
லெழுமதி யொன்றை யெடுத்தாரோ. (கசு)

நேரிசைவெண்பா.

எடுக்குமான் வெங்கையிறை யேந்திழாய் நின்னெஞ்
சடுக்குமால் பங்கினள்கே ளாமற் — கெடுக்கவே
காதின் மறையாய்நின் கண்போன்ற தாதலா
லோதுஞ் செயல்பா ருவந்து. (உ0)

கட்டளைக்கலித்துறை.

துன்னாரை வென்ற சிலையாளர் வெங்கை சுடர்க்கிரிமே
லென்னாவி கொள்ள வரிப்புள்ளி மானுக் கெளிதன்றென்றோ
பொன்னார் சுணங்குப் புகர்முக வேழம் புயனுணங்கு
மின்னா மருங்கு லணங்கே தடாமல் விடுத்ததுவே. (உக)

நேரிசைவெண்பா.

வேலைக் கடுவயின்ற வெங்கையர னாரிவட்குச்
சாலத் திருமறுகிற் றந்துபோ — மாலிப்
பெரு * மையாற் போக்கும் பிணியோ வவர்த்தாழ்ந்
தருமையாற் போக்கு மது. (உஉ)

புயவகுப்பு.

அந்தி யொடுமோறு பட்டுத் திகழ்ந்தன
வன்று தமிழ்மூவர் வைப்பச் சுமந்தன
புந்தி மகிழ்மாது கட்டக் குழைந்தன
புண்ட ரிகமாலை யுற்றுக் கிடந்தன
நந்து தலைமாலை யிட்டுச் சிறந்தன
நன்றி மறைநாலு மற்பிற் புகழ்ந்தன
விந்த மகமேரு வொப்பக் கிளர்ந்தன
வெங்கை புரிநாதர் வெற்றிப் புயங்களே. (உங)

கலிநிலைத்துறை.

புயலே யுனையங் கெதிர்கண் டிடுமப் பொழுதேவன்
குயிலே யனையா ளென்வர வினைநீ கூறுங்கான்
மயிலே யனையாள் பழமலை வெங்கை வளமன்னாள்
வெயிலே யிழையா ணின்பகை நிற்றாழ் விப்பாளே. (உச)

* மை - ஆடு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விழியொன் றியான் னுதற்பரமர் வெங்கை விரும்பும் * விம லேச, ரொழிலொன் றிரதக் காலிரதக் காறெற் கெழுந்தே யோடுகினும், பிழையொன் றிடினு மவர்வாளி வாளி பிறழா தியான்புகலு, மொழியொன் றகலே னுனையெனமுன் மொழி ந்தா ரென்னை யொழிந்தாரே. (உரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒழியாத னங்க வொருகோடி வாளி யுளவேனு மெய்தி யினி யென், விழியான வுன்னை யுருவில்லி யென்ன வயலோர்கண் முன்செய் விமல, வுழியான வெங்கை தனிலேகின் மாது முரு வில்லி யென்று நினையே, பழியாட லின்று செயுமன்பர் வந்த படியா லொழிந்த பயமே. (உசு)

கலிவிருத்தம்.

பரவும் வெங்கைப் பழமலை நாட்டுளேன்
வெருவ வெந்தழல் வீசுகின் றுய்மதீ
பரிவி லாவுனைப் பாம்பு கடிக்கநீ
மருவு பெண்பழி மாற்றிட வல்லையோ. (உஎ)

---

* விமலேசரொழிலொன் றிரதக்காலென்றது, சிவபெருமான் கொண்டருளிய பூமியென்னும் இரதத்தின் உருளையாகிய சூரி யனை; பின்னர் இரதக்காலென்றது, அச்சூரியனுடைய இரதத்தி னுருளையை. வாளிவாளி,என்றது, அப்பெருமானுடைய பாணமா கிய திருமாலின் பாணத்தை. எனவே, என்றும் நியதியாகக் கிழக் கேதோன்றி மேற்கேயோடும் சூரியனுடைய இரதவுருளை தெய் வகதியால் அந்நிலைமாறி தெற்கேதோன்றி வடக்கேயோடினும், சுட்டி விடப்பட்டாரைத் தப்பாது கொன்றேமீளும் அத்திருமா லின் பாணம் தவறுதலை யடையினும் அக்காலத்தும் என்மொழி பிறழாதென்னத் தலைமகனிசைத்தவாறு.

கட்டளைக்கலித்துறை.

வல்லெனு மாமுலைக் கோதைய ராசை மறந்தவர்க்கே
யொல்லையி னீகுவன் கம்புமுன் னூழி யுடையன்றங்கை
செல்லிரு நாழி கொளக்கொடுத் தோனெடு வான்கதிரின்
பல்லுக மோதிய வெங்கைப் பிரான்றன் பதாம்புயமே. (உஅ)

சம்பிரதம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பலவரைகள் கரத்தடக்கிக் காட்டு வோநீர்
  பார்ப்பவரே கங்கடலை யருந்து வோநா
மிலகுறநும் மனையிடத்தி னுலோக மெல்லா
  மிக்கணமே காட்டிடுவோ முலகி லெண்ணில்
கலையறிவோ மொருகாலும் பொய்ம்மைபகர்ந் தறியோங்
  கண்ணனெனு மவன்வாயின் மண்விழுமுன் னருளா
லலையிலெழுங் கடுமிடற்றி னடக்கு மீச
  னமர்ந்ததிரு வெங்கையினின் றடைந்து ளோமே. (உகூ)

நேரிசைவெண்பா.

மேகத்தை யொத்துவளர் மென்குழலைச் சார்ந்திலைநின்
னாகத்தை யொத்துவள ரந்திதனில் — வேகத்து
வேளிக் குவளையுமே வெங்கையம லாபடுமே
வாளிக் குவளையுமே வந்து. (௩0)

கைக்கிளை. மருட்பா.

வம்புலவு மீர்ங்கோதை வாடுகின்ற தென்மனம்போ
லம்புவியிற் றேய்ந்த வடித்தா மரையதனுற்
செங்கமலை பேதையாச் செய்யு மடர்தையிவள்
வெங்கைநகர் மேய விமலன் றிருவருளால்
விண்ணின் பெருமையும் வியனீர்
மண்ணின் சிறுமையு மறவரு மணங்கே.

கட்டளைக்கலித்துறை.

அற்போ டமரர் குழாம்போற்றும் வெங்கை யமலர்வெற்பி
னற்போ தகமன்ன மன்னநின் காத லமைதியாள்

பொற்போ டரவுமிழ் செங்கேழ் மணியைப் புனந்தில்வெறுங்
கற்போ லெறிந்து சுகம்போக்கி நிற்கின்ற கன்னிகையே. (ருஉ)

வஞ்சித்துறை.

கன்னனெ டுஞ்சிலைவே, டன்னதி ருங்கணைபோ,
தென்னநம் வெங்கையுளாய், மின்னைய ணைந்தருளே. ()

எழுசீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

அருளாளர் வெங்கை புரமேவு கின்ற வரனுரை நம்பு கில ர்போன், மருளாவ யர்ந்து தமியேனி ருந்து மதனுல ழிந்து விடவோ, பொருளாத ரங்கொ டகனுய கன்ற னெடுநோவ ணைந்து புகலா, யுருளாவி ரைந்து திரைமோது கின்ற வொழி யாவ ளங்கொள் கடலே. (ருச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடகரி நரம டங்கல் காலன்வெண் மதிய ரக்க
னடுமுய லகன்ப தைப்ப வடர்த்தனை பதத்தாற் கஞ்ச
னடுமுடி கரத்திற் கொண்டாய் நகைத்துமுப் புரமெ ரித்தாய்
படைகள்கைக்கொண் டதென்கொல்பகருதிவெங்கையோனே.

கலிவிருத்தம்.

வெங்கைப் பதிமே வியவித் தகநின்
றுங்கப் படுதேர் மிசையே * சுடர்கா
றங்குற் றவியங் குறுதன் மையெவ
னங்கட் கதியம் புதிநன் குறவே. (ருசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நன்போது கொடுபுலவர் பரவுதிரு வெங்கைபுர நாதர் நா ட்டின், முன்போத வறிவனைத்து முயிர்மதவே ளெடுத்தசிலீ முகங்க டாக்கிப், பின்போது மமயத்தோ வெமக்குமணி வாய் மருந்து பெறவ ளிப்பீர், பொன்போல வடிவுபடைத் திரும்பு போன் மனம்படைத்த பொருவின் மாதே. (ருஎ)

---

* சுடர்கர்ல் -சூரியசந்திரர்களாகிய உருளைகள்.

நேரிசைவெண்பா.

பொன்னுண் கவினிமைக்கும் பூவையர்சொற் கண்கைவேள்
வின்னுண் கணைநிகர்க்கும் வெங்கைபுர—மன்னுமுன்
னீர்க்குப் பயந்தவடா னீநெருப்பா யன்றெழுந்த
சீர்க்குப் பயந்திலளோ செப்பு. (௩அ)

தழை. கட்டளைக்கலித்துறை.

செவ்வா யிளந்திரு நீதந்த மாந்தழை சீறடிக்கு
மொவ்வா தெனநினை யாதுகண் ணேடொற்றி யோதிவைத்தா
ளவ்வா னவர்புக ழெம்மான் றிருவெங்கை யன்பமதன்
வெவ்வா ளிகள்விலக் காமருந் தாக வியந்தனளே. (௩௯)

நேரிசைவெண்பா.

விழுமுருளு மேங்குமெழும் வெங்கைக்கோ விந்தா
வெழுமதிய மென்னு மிரங்கும்—தொழுமிதழி
யின்று மணைக்க ணிராமா வருளெனுநீர்
தன்று மணைக்கண் டர. (௪0)

கட்டளைக்கலித்துறை.

தடுத்திலை யைம்புல வேழங்க டம்மைத் தவநெறியி
லடுத்திலை யன்ப ரினமே மருவி யவலரினம்
விடுத்திலை யெங்க டிருவெங்கை வாணர் விரைமலர்த்தா
ளெடுத்திலை நெஞ்சக மேவிடு மோகம் மெழுபிறப்பே. (௪க)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

* என்னடிகள் வெண்குறணே ரடியி ரண்டு மென்றலையி விருத்துமிறை வெங்கை நாட்டின், முன்னடிக ளிரண்டுநெடி லடிகள் பின்னர் முயங்கடிக ளிரண்டுநே ரடிக ளாகப், பன்ன டிக ளொருநான்கு கொடுந டக்கும் பழுதகல்வெண் டுறைபோ

* என்னடிகளென்றது திருவள்ளுவநாயனுரை.

லப் படர்த லாலே, பின்னடிக ளெங்கடிரு வடிகண் முன்னர்ப்
பெயர்ந்தவடி யெழிலிளஞ்சே யடிக ளாமே. (சஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர ணங்களு மோத ரும்புக ழாளர் வெங்கைபு ரேசனூர்
பூர ணந்திரி யாது ணர்ந்திலர் போல வன்றுயர் கூடவே
வார ணங்கனி தானி ரும்பிடி வாயி னுங்குற வேகொடா
நேர ணைந்திடு கான கம்புகு நேயர் வந்திலர் மீளவே. (சங)

கட்டளைக்கலித்துறை.

மீனக் கருங்கண்ணி வேள்கணை யாற்சிலை வேடர்வைத்த
கானக் கருங்கண்ணி மான்போற் பதைத்தனள் காரளிக
டேனக் கருங்கண்ணி யீந்தரு வீர்திரு வெங்கைநகர்
மானக் கருங்கண்ணி மாநீர்ந் தவளுயிர் வாழ்வதற்கே. (சச)

சித்து. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாளா வொளிர்கட் பொனணைந் திடுமோன் மாலா கவிளங் குறுபொன் னனையா, ணீளா சையினுய்த் தகரும் பொனெலா நிகழ்செம் பொனெனப் புரிசித் தர்பெறு, மாளா யவர்வெங் கையிருப் பமவ ரருளப் பொடியா குமருந் துதனைக், கேளா யெளிதா கவளித் திடுவேங் கிளர்நம் பசிதீ ரவனம் படைவே.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படத்தினிற் பொதிந்த குடத்துவெள் ளெலும்பு பரிந்து பெண் ணுக்கவு மறியா, பரவையிற் புணைபோன் மிதந்துவந் தணையப் பருங்கல்பண் ணுக்கவு மறியா,—வடுத்துல கனைத்தும் பரவுறு மறைந்த வரியகண் ணுக்கவு மறியா, வமலவென் கவிக ளடியனேன் மனத்தை யளிந்தபுண் ணுக்கவே யறியு,—மெடுத் தசங் கதனை விடுத்திவற் றெதனை யெடுப்பமென் றரியுள மருள, விவர்ந்திடு மெகின்விட் டிவற்றெதை யூர்வ மெனவயன் கருது றக் குவனை,— விடுத்திவற் றெதனைப் பறிப்பமென் றுசாவ

வின்மதன் பணிலம்வா லெகினம், விரிந்ததண் குவளை பரந்த
வொண் பழன வெங்கைவா ழெங்கணு யகனே. (சசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாடா வுழைகள் புனநாடு நாணுஞ் சுகமுஞ் சுகமாகு
மாடா மயிலு மரவுணவுண் டாடு மரவு மெலியுண்ணும்
பீடார் கயிலை மலைப்பெருமான் பிரியா வெங்கை புரநாட்டிற்
கோடா விதணிற் புனத்திருந்த கொடியார் சென்ற படியாலே.

மேற்படி வண்ண விருத்தம்.

படியறு சிம்புள தெழநீடும் பயமொடு மங்கரி யினமோடப்
பிடியொடுமங்கரியினமோடப்பெருவரிவெம்புலிபொருகேழன்
மடிமயி ரொண்கதிர் திசையோடும் வனவழி வெங்கையிலுறுமீச
ரடிதவிர் நெஞ்சக மெனநீளு மகலிரு ளிங்குற * லயநீயே. ()

நேரிசைவெண்பா.

நீத்தவினை யார்புகழும் வெங்கையோய் நின்னடியாற்
றேய்த்த மதியைத் திரும்பநீ—வாய்த்தநறுந்
தேனனைக்குங் கொன்றைமுடி சேர்த்தி யழல்விக்க
யானுனக்குச் செய்தகுறை யேது. (சக)

கட்டளைக்கலித்துறை.

ஏட விழுங்குவ ளைத்தாரிற் றேனெ டிசைச்சுரும்புங்
கூட விழுங்குவ வுத்தோட் டிருவெங்கைக் கோன்றுணையாங்
கேட விழுங்குவ ரிப்புன லுண்பவன் கேழ்மதியம்
வாட விழுங்குவ தெய்தாமை நான்செய்த வல்வினையே. (ருo)

கோச்சகக்கலிப்பா.

வல்லங்க மானமுலை மாதுமையா ளென் றனிணை
யில்லங்க மானந்த வின்பகையென் றவண்முனியச்
சொல்லங்க மீதிற் சுமப்பதென்கொ னீயிந்த
வில்லங்க மாம்பிறையை வெங்கை புரத்தரனே. (ருக)

---

* ஐயவென்பது அயவெனப் போலியாயிற்று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரந்தரனு மரியயனும் பரவுபரன் திருவெங்கை புரமே யன்னு, விருந்தளர வடம்புரளு மிளமுலைக ளூடோறு மெழுந்து யர்ந்து, வருந்தமனா மலர்த்தாளு லெனத்தினமுந் தேய் மருங்கை வருத்த நீருந், திருந்துநெடுங் குழலிசைதல் வண்டினங்கா டகுதிகொலோ செப்பி டீரோ. (ருஉ)

கலிநிலைத்துறை.

செங்கையில் வில்லே றிடுகணை யோடுஞ் சினவேளை
யிங்குற வாவா வென்ன விருந்தே குயில்கூவ
மங்கையர் நானே மாவை வளர்த்தேன் வடுவுற்றேன்
வெங்கையின் மேவுங் கண்ணுத லாரும் வினவாரே. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வில்வளைத்தைங் கணைகொடுபோர்த் தொழில்புரிய வரும் பொருவில் வீர வேளே, கல்வளைத்தன் றொருகணையான் முப்புரங்கண் முருக்குபெருங் கழற்கால் வீரன், பல்வளைத்தெண் புனற்பழன வெங்கையாண் டகையொடுபோர் பயிலப் போதி, யெல்வளைத்தண் டளிர்க்கையிளம் பெண்ணொடமர் செயலாண்மைக் கியன்றி டாதே. (ருச)

கலிவிருத்தம்.

இந்து வந்து வெதிர்ப்ப விருந் * தமிழ்
வந்து வந்து மலைப்பதை யின்றொடை
தந்து வந்து தவிர்க்கிலர் செய்க்கனா
நந்து வந்துமன் வெங்கையி னுதரே. (ருரு)

ஊசல். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நானக் குழலளிக ளெழுந்து பாட † நாதித் தணியசைய வாடி ரூசல், பானற் கமலவயல் வெங்கை வாணர் பதமுற் றிலர்

---

* தமிழ்வந்து-தமிழொடு பிறந்த காற்று. † நாதித்தல்-ஒலித்தல்.

பவமொத் தாடி ரூசல், மானக் குமரருள மறுகி யாட வாட் கட் புடைபுரள வாடி ரூசல், கூனற் பிறைவெயர்ப்ப வாடி ரூசல் கோவைக் கனியிதழீ ராடி ரூசல். (ருசு)

கட்டளைக்கலித்துறை.

ஊனாகி யைம்புலக் கூட்டங்க ளாகி யுழல்கரணந்
தானாகி வெவ்வுயி ராய்க்குண மாகித் தனியிருளாய்
நானாகி நல்லருட் சத்தியு மாகி நலத்தவெங்கைக்
கோனாகி மற்றொன்று மாகா திருப்பக்கை கூடியதே. ()

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூடற் பதியிற் சமணிருளைக் குலைத்துத் திருவெண் ணீற்ற தொளி, கொடுத்துக் கருத்திற் குடிபுகுந்தென் குலத்தைத் தொழும்பு கொளுங்கோவு,—மாடற் பரியிற் சேரமா னணையக் கயிலைக் கிரிமீதி, லானைக் கழுத்தி லிவர்ந்தணையு மரசுந் திருநா வுக்கரசு,— நாடப் பசும்பொ னிடைப்பதித்த நாக மணியிற் றமதுதமிழ், நாட்டப் படுநின் றனதுதிரு நாமத் தினைப்புன் மதியாலென்,— பாடற் பதிப்ப திரும்பிலதைப் பதிக்குந் தகைமை போலுங்காண், பதியாய் வெங்கைப் பதியாளும் பகராக் கருணைப் பெருமானே. (ருஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாறு மலமொன் பதுவாயும் வழியு முடலை யுடலமிக, காறு வகைநன் மணந்திமிரு நடலைக் கபட மாதர்தமைப், பேறு நினைந்து கடலமுதே பிணையே மயிலே யெனப்பிதற்றித், தேறு வெனையுந் தனைத்துதிக்கச் செயுமோ வெங்கைச் சிவன்றனே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவனாலு மறையாலு முணர்வி னாலுந் தெரியாத பரன் வெங்கை யரசன் றன்மா, தவனாலு மயனாலு மலரி யாலுஞ் சசி யாலுங் குருவாலு மமரர் கோவா, மவனாலுங் குகனாலு முனிவ ராலு மரவாலுஞ் சுரராலும் புலவ ராலு, மெவராலும் வெலற்

கருமைம் புலன்கள் வென்ற வெழிலடியார் பெருமைதனை யியம்பொ ணாதே. (சுO)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேக்குறு கருணைப் பெரியநா யகிதன் றிருமுலை சுரந்தபான் மதுர, வாக்குறு மழகன் ஞானசம் பந்த வள்ளலுண் டிடவவன் கடைவாய்ப், போக்குற வொழுகுந் திவலையொன் றடியேன் புண்ணிய வசத்தினாற் கிடைப்பிற், றூக்குறு புலன்வென் றுன்னடி யவருட் டங்குவன் வெங்கைகா வலனே. (சுக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருமதன் கொடிய னென்பாள் வரிக்குயிற் காற்றே னென்பாள்
குருமதி முனியே லுன்னைக் கும்பிடு கின்றே னென்பா
ளொருவரும் வெங்கை யீசற் குரைப்பவ ரிலையோ வென்பாண்
முருகல ரணைதி தென்பாண் மொய்குழன் மையல் கொண்டே.

கலி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டறவழ் மணிமாட மலிந்த வெங்கைக் கோவிடங்கொள் பெரியநா யகியெம் மன்னை, தண்டரள நகையுமையாள் கருணை தன்னாற் றூலத்து வந்தகுருக் களையுட் கொண்டு, கண்டவர்க ளதிசயிப்பப் பரமா னந்தக் களிப்படைந்து கரணமுடல் புலன்க ளெல்லா, முண்டெனவு மிலையெனவு முணர்ந்தி டாமலுணர்வுகடந் திருக்கின்ற களியர் யாமே. (சுங)

நேரிசைவெண்பா.

யாமேபோய் வெங்கை யிறைவன்பான் மெல்லியலீர்
மாமேவுந் தண்மாலை வாங்குவோம்—பூமேவு
மன்னத்தாற் காண்டற் கரியவனைத் தூதுவிடு
மன்னத்தாற் காண்டற் கரிது. (சுச)

கட்டளைக்கலித்துறை.

அரியானை வேதன் றலையரி வானை யரியமறைப்
பரியானை யெங்க ளிடைப்பரி யானைப் பழுதில்வெங்கைப்

புரியானை யெவ்வுல கும்புரி வானைப் பொதுநடனந்
திரியானை யையங் கொளத்திரி வானைச் செறிகுவனே. (௪௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செறியிதழ் வனசப் பொன்னிற் சிறந்தமா தினையு நீங்கிப்
பொறிவழி மறுத்து வெங்கை புரத்தனைப் பொருந்த நோக்கு
மறிஞரு மிவனைக் கண்டோ மருந்தவப் பயனு லென்னு
மறிவிழி யணங்கைக் கண்டு மறியுமோ மன்னர் கோவே. ()

நேரிசையாசிரியப்பா.

கோதை தாழ்ந்த கொடிநிமிர் நெடுந்தேர்ப்
பரிதி வானவன் பரவையிற் படியக்
கடனிறக் கமலக் கட்பெருந் திருமான்
மார்பிடைக் குங்கும மட்டித் தாங்கு
குணகடற் றுகிர்ப்பூங் கொடிபடர்ந் தென்னச்
செக்கர்வந் தெய்தத் தன்மனந் திரிந்து
மணந்தவர்த் தணந்த மாதர்வீழ்ந் திறப்ப
வமைத்த வழல்கொலோ வறைதி ரொன்னுஞ்
சேண்விசும் பெழுந்த திங்க ளேக்கிக்
கருங்கடு வுமிழ்ந்த கடன்ம றித்தொரு
வெண்கடு வுமிழ்ந்த தெனவுளம் வெதும்பு
மந்த மாருதம் வந்தழல் வீசுற
வாற்று ளாகியவ் வளக்கரி னின்றெழு
மூழித் தீகொலென் றுன்னியே யயரும்
வேய்ங்குழல் காம வெவ்வழல் கொளுவ
வூதுங் குழலென் றுளைத்தக நெகிழு
மென்மல ரமளி மேல்விழும் புரளு
மசைந்தெழு முயிர்க்கு மந்தோ வென்னு
மொள்ளிதழ் குவித்துயிர்ப் புமிழ்ந்திடு மவிழ்ந்த
கருங்குழல் வாமக் கரங்கொடு செருகித்
தனிப்பொற் றூணிற் சாய்ந்திடும் பனிநீர்

சந்தனக் கலவை தண்ணறுங் கோலத
தரள வடங்க டரிப்பவர் திறைஞ்சும்
பாங்கியர்ச் சுளிந்து பறித்தவை யெறியு
மழவிடை மீதில் வந்துநீ யுலாவக்
கண்டுநின் னழகுணுங் கருங்கட் பூங்கொடி
விரைமலர்ப் பொழில்சூழ் வெங்கை காவல
பொன்னவிர் புரிசடைப் புனித
மன்னவ வவனேய் மருந்துநின் புயமே. (௬௭)

எண்சீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

புரளுந்திரை யெறியுங்குரை கடலும்பகை தமிழோன்
பொதியம்பகை மதியம்பகை மதனன்பகை முலைசேர்
தரளம்பகை பனையன்றில்கள் பகையங்குயில் பகையே
தமரும்பகை யனையும்பகை சகியும்பகை நகர்வாழ்
திரளும்பகை மலர்சிந்திய வணையும்பகை பனிநீர்
திமிருங்குளிர் களபம்பகை யெனிலென்செய வடியே
னருளுஞ்சுக மருள்கின்றிலர் பெயர்சங்கர ரெனவே
யணிவெங்கையி லமர்கின்றவ ரதுமென்குறை யனமே. ()

நேரிசைவெண்பா.

அந்துவா வென்று * மறையே னினைத்தவர்க்கு
வந்துவா வென்று மருவல்போ—லிந்துவா
ழென்றைக் கடுக்கு மிருஞ்சடைசேர் வெங்கையோ
யென்றைக் கடுக்கு மிதம். (௬௯)

வண்ணத்தாழிசை.

இதயங்கலங்க வினையம்புகன்ற வொருவஞ்சகன்ற னுடனே,
யெனையுந்துறந்து மனையுங்கடந்து தனியங்ககன்ற மகளே,—
மதியங்கிடந்த முடியன்றயங்கு திருவெங்கைவந்து நெடுநாள்,
வரமுன்கிடந்து நினைமுன்பயந்த பயனின்றுகண்ட திதுவோ,

---

* அறையோம் என்றும்பாடம்.

— புதிதங்கிலங்கு மணியன்றிநைந்த சுடரொன்றிருந்த மனை யே, புகவெம்புகின்ற வடிவம்பரந்த தழல்வெஞ் சுரஞ்செல் வுறுமோ,— வதனம்பொலிந்த குமுதம்புலர்ந்து விடிலங்கிரு ந்த முவளோ, மகள்சென்று முய்ந்திவ் வளவும்புலம்பு மனம் வல் லிரும்பின் வலிதே. (எ0)

ஆசிரியத்தாழிசை.

வலிய வடியேன் மனத்துவந் தெய்தினன்
மலியு மழுதனும் வானவர் தேடியே
மெலிய வணுகலா வெங்கையி லீசனே. (எக)

பன்னிருசீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

ஈதற மன்று தனித்தே யானுறு கின்ற தலத்தே
யேகினை யென்கை பிடித்தே யேதமி தெங்கள் குடிக்கே
மீதுறு கொன்றை மணத்தால் வேணியி லிந்து வுருப்போல்
வீறுகிர் கொங்கை யுறுத்தால் வேல்விழி முந்து சிவத்தாற்
கோதித ழின்று வெளுத்தாற் கோளனை கண்டு கறுப்பாள்
கோதையர் வம்பு தொடுப்பார் கோடர மஞ்ச ணிறத்தான்
மாதுமை கண்டு கொதிப்பாண் மாபுகழ் வெங்கை புரத்தோய்
மாறுவை யன்பு பிணைத்தான் மாழ்குவ னென்று மிளைத்தே.

கட்டளைக்கலித்துறை.

இளையா திடைமென் முலைசுமந் தேயம் முலையு மின்னங், கிளையா வுயிருண் டிடவறி யாவிரு கெண்டைகளு, முளையா நகையிவண் மேல்வெங்கை வாணநின் மொய்ம்பிலன்றி, யளை யா நறும்பொடி பட்டதன் றேமிகு மற்புதமே. (எங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரவு முரிகளு மென்புமா லயனோ டமரர் தலைகளு முண் கபா லமுநீ, யொருவி யறுவைபு னைந்துமா லிகைவா ளுமிழு மணியணி சந்துமான் மதமே, மருவ வுருவில ணிந்துமா லையிலே வருதி மலைதர வந்தநா யகிபோல், வெருவி யிவளவை நீந் தியா ளலள்காண் விமல வெழின்மிகு வெங்கைவாழ் பவனே.()

நேரிசைவெண்பா.

வாட்டுபவங் கொல்புகலி வண்புலவன் பேரின்ப
வீட்டுபவங் * கொள்ளைகொள விட்டநாட்—கேட்டுவரா
தெப்பிறப்பி லெங்ஙனிருந் தேதுபுரிந் தெய்த்தேனோ
வொப்பிறப்பில் வெங்கையுடை யோய். (எரு)

வண்ணக்கலித்துறை.

உடைய வினைகளை முடுகி யெனதுள மொன்றினோ
னடைய வறிவெனு மறிவை யருளிடு மண்டர்கோன்
விடைய னரவணை துயிலு மரிதொழும் வெங்கையோன்
சடைய னுமையுறு புடைய னவனடி தஞ்சமே. (எசு)

வண்ணத்தாழிசை.

தழுவி யணையினு றங்குதாய் தனையு மருகுநெ ருங்கியா
தரவி னொடுதுயில் இன்றமா தரையு மரிதின கன்றுபோய்
வழுவை யனையம றங்கொள்கா வலர்கள் பதறியெ ழுந்திடா
வகைபல் கடைகடி றந்துரு மறுகு தொறுமிக வந்தசூ
ழொழிவின் ஞமலியி ளாந்திடா துணவு சிதறிய ணங்குபோ
யுலவு மிருணிறை கங்குல்வா யுனது மருமமு யங்கவே
விழைவி னணையவ ணைந்திலாய் வெருவ விடுவத றங்கொலோ
விழும மகதிரு வெங்கைவாழ் விமல விதனைவி ளம்பிடே. ()

துறள்வெண்சேந்துறை.

விண்ட பூமுடி வெங்கை புரத்தனைக்
கண்ட மாதர் பெறுவது காமமே. (எஅ)

மதங்கு. எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காவி கொணட களத்தர் வெங்கை புரத்தர் தங்கழல் பாடியே
வாவி கொண்ட மலர்ப்ப தங்கள் சிவப்ப வாடு மதங்கிதா [மோ
ளீவி கொண்டு முலைத்த டங்கண் மறைத்தி லாளெனி னிற்கு
வாவி கொண்டிடு மிங்கி தற்குமு னென்று காளைய ரயர்வரோ.

---

* பவம் - உலகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அயன்கொளுங் கவின்கூர்வெங்கை யமலன்றன் வரத்தா லன்றி, வியன்கொளுங் கவினுன் மற்றோர் மெல்லியல் சேர்வோ னன்றே, நயன்கொளுந் தவமென் செய்தா ணகமகளொ னத்தன் காதல், பயன்கொளும் படிப கர்ந்து பரிகுவண் மாதர் மாதே. (அ0)

நேரிசைவெண்பா.

மாதா வயிராமன் மற்றோர் பொருள்குறித்து
வேதா வறியாத வெங்கைபுரத்—தாதாவை
யப்பாவா வீட்டிற் கடியேன்சொற் கம்பெறவென்
றிப்பாவை கூறு மிரந்து. (அக)

கட்டளைக்கலித்துறை.

இரவாம லொன்று மயலோ ரிடைச்சென் றிரப்பவர்க்குக்
கரவாம லென்று மிடரே புரியுங் கடும்புலனிற்
பரவாமல் வெங்கை புரிவாணற் கன்பறும் பாதகரை
விரவாம னின்றவர் தாமே பரகதி வேண்டினரே. (அஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

* வேண்டுவோர் வேண்டியதே யீவா னென்னும்
வியன்றிருநா வுக்கரசின் மாற்றம் பொய்யோ
வீண்டுவா வென்னைவலப் பாகந் தன்னி
லிருத்துகென நினைவேண்டி யொழியா மையல்
பூண்டுவார் விழிததும்பு புனலோ டொன்றும்
பொற்றொடிக்குந் திருவருள்செய் கின்று யல்லை
நீண்டுவா னுலகளக்கும் பொழில்சூழ் வெங்கை
நிமலனே யெமையாளு மமரர் கோவே. (அங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோபந் தோன்ற வதிர்ந்தெழுந்து கோக்க டொறுமின் வாள்வீசிச்,சாபந் தோன்றவளைத்தொழியாச் சரமேபொழிந்து

---

* திருமறைக்காடு திருத்தாண்டகம் - க. (தூண்டுசுடர்.)

காரகிலின், றூபந் தோன்று குழற்பகைதான் ஞேன்றிற் றிறை வன் றிருவெங்கைத், * தீபந்தோன்றும் புயனினைவைத் தீரா ரின்னும் வாராரே. (அச)

மேற்படி வேறு.

வார்கொண்ட களபமுலை யுமைகணவன் றிருவெங்கை மகி ழ்ந்த தேவே, யேர்கொண்ட வுனது † மாணிக்கமலைக் கருங் கொடியை யெரிப்ப தென்கொல், கார்கொண்ட பசுங்காவின் மாவினிருந் தெங்கணமர் கடிய வந்தப், போர்கொண்ட மதவே ள்வந் துறக்கூவுங் கருங்குயிலைப் பொடித்தி டாதே. (அரு)

கோச்சகக்கலிப்பா.

பொடித்தமத னுயிர்படைத்துப் பொருவதுவும் வெவ்வரவங்
கடித்தமதி பிழைத்தனலங் கால்வதுவு மாமுனிவன்
குடித்தகடன் மறித்தெழுந்து குமுறுவது முன்னமுன்னைப்
பிடித்தவினைச் செயலன்றோ பிரிவில்வெங்கைப் பெருமானே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மான்கொண்ட கரத்தர்திரு வெங்கைபுரத் தவர்பலகை வழங்கப் பெற்ற, தேன்கொண்ட விசைப்பாண ரெனநினைப்ப லுனைப்பாண சிறப்பு நீத்த, கான்கொண்ட தொடைப்புயத்தர் பெயர்மொழியா யெனிலவர்பேர் கழற லாற்று,லூன்கொண்ட மழுவலத்தோ ரிசைக்குடைந்த பாணனென வுள்கின் றேனே.

---

* தீபம் - சுவாதிநாள்; ஐப்பசிமாதத்திலே சுவாதிநக்ஷத் திரத்திலே மழைபெய்யுமென்பதைச் சிந்தித்துள்ளவரென்னுங் கருத்தால் "தீபந்தோன்றும் புயனினைவைத் தீரார்" என்றாள். இச்செய்யுளில் சிலசொற்கள் சிலேடைப்பொருள் தந்து நிற்கின்றன.

† மாணிக்கமலை-இரத்தினகிரி; வாட்போக்கி என்பதும் இது வே. இதில் பாலைக்கவிழ்த்த காகத்தை ஒரு இடையன் பொரு ட்டு எரித்த சரித்திரவிரிவை அத்தலபுராணத்துட் காண்க.

கலிநிலைத்துறை.

உள்ளே னன்பர் தங்களொ டன்போ டுறும்வண்ணம்
விள்ளேன் வஞ்சம் பொய்கொலை காமம் விடுகில்லே
னெள்ளே னங்கம் வெங்கைபு ரேசா வெனநேயங்
கொள்ளே னெவ்வா றுய்குவ னந்தோ கொடியேனே. (அஅ)

தவம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொடியவரை வனத்திருந்து நோற்கி னுந்தோட் கொற்றவரை யொத்தவரைத் துறந்து போகிப், படியவரை மருட்டு தவ வேடந் தாங்கிப் படிமுழுது முலாவுகினு மறைக ளெல்லா முடியவரை யறுத்துணர்ந்து புகலி னுந்தீ முளரிமலர்க் கரத், தெடுத்த வெங்கை வாண, ரடியவரை வழுத்தியவ ரடிகள் சூடா வவலரையோர் பொருளாக * வறிகி லேமே. (அகூ)

மேற்படிவேறு.

அறிவினிலி லங்குதிரு வெங்கைநக ராள ரடியினின்மு யங்கியுறு மென்றனக வன்மை, யெறியயிலை வென்றவிழி யின் கடையி னுலே யிமைவிழுமு னுங்கிமய றந்தமட மாதைப், பொறியரவ ணைந்துதுயி லுங்கடவுள் கண்டாற் பொறியவனு ரந்தனிலி ருந்திடுவ ளோதான், வெறிமலர்நெ டுஞ்சிலைய னங்கனெதிர் கண்டான் மிகுமிரதி கொங்கையவ லம்புயமு றுதே.

கட்டளைக்கலித்துறை.

உறுதே சிறிய ரினம்பே ரருட்பய னுற்றவர்சொன்
மறுதே புலனிற் புகாதே திருவெங்கை வாணற்கன்பு
வெறுதே யுனக்கிடர் செய்கின்று ளோர்க்கிடர் மீண்டியற்றிக்
கறுதே யிருமன மேபிற வாநெறி காண்பதற்கே. (கூக)

---

* அறிதல் - ஈண்டுமதித்தல்; "பெறும்வற்றுள் யாமறிவ தில்லை" என்னும் திருக்குறளிற்போல.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காணும லயன்றேடு நின்மு டிக்கட் கண்ணப்பன் றருகேழ
ற்கால் வைத்த போதிற், கோணுக முரிந்ததுவோ குளிர்வெண்
டிங்கட் கொழுந்துபொரு தொதுங்கிற்றோ நீர்ப்பெ ணன்பும்
பூணும லருவருத்து நோக்கி னுள்கொல் பொன்னிதழித் தொ
டையல்சூழ் திழுத்த தோசொல், வீணுள்பட் டழியாத வன்
பர்க் கன்பாம் விமலனே வெங்கைவரு மமர ரேறே. (௬௨)

தோழியார். நேரிசைவெண்பா.

ஏறுவக்கும் வெங்கை யிறைவற் றெழுதுதவப்
பேறுவக்கு மின்னே பிடிக்கவோ — கோறுவக்கும்
கூடு குறைத்த கொடுமதனை மொய்த்தகுழற்
காடு குறைத்த கருத்து. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரியவன் கமலக் கோயிற் கண்ணவன் கற்ப கக்கா
வுரியவன் சுரர்குற் றேவ னுவந்துநா டொறும்ப யின்று
மரியவ னென்னத் தன்று ளன்பிலா வெனக்கு வெங்கைப்
புரியவ னளித்தா னென்னுற் புரிதருங் கைம்மா றென்னே. ()

கட்டளைக்கலித்துறை.

எந்தீ வரமதி மாழ்கிச்செவ் வான மெனுங்கொடிய
செந்தீ வரமதி யாகும்வெண் டீவரத் தேம்புமெம்மே
* லிந்தீ வரமதி ரேகவில் வேள்விடி னேதுசெய்வோ
நந்தீ வரமதி னுடாளும் வெங்கை நயந்தவனே. (௬௫)

---

(௬௩) மகளிர்கூந்தலை மன்மதனுக்கு அரணுகவகுப்பது நூற்
றுணிபாகலின் குழற்காடு குறைத்தகருத்து மதனைப்பிடிக்கவோ
என்றார்; இதனை "மட்டுக்கணைவேள் அரணுக்வளர்த்த குழற்
காடு" என்னும் பிரபுலிங்கலீலையானுமுணர்க.

* இந்தீவரம் - கருங்குவளை. அதிரேகம்-அதிசயம், உயர்ச்சி.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நயன மிருண்டு போகாமுன் னடனப் பெருமான் றனைப் பாரார், நடக்கும் பதங்க டளராமுன் னடவா ரமலன் றிருக் கோயில்,—பயனின் மொழிகள் குளறுமுன் பரம னடித்தா மரைதுதியார், பழுதில் செவிகள் செவிடாமுன் பரிந்து சிவன் மெய்ப் புகழ்கேளார்,—செயலி னெடுங்கை நடுங்காமுன் றிரு மா மகளுங் கலைமகளுஞ், செறியுந் திருவெங் கைக்கரசைச் செழுமென் மலர்கொண் டருச்சியார்,—மயலி லழுந்தி யயரா முன் மனத்தி லவனை யிருத்திடார், மனித ருழன்று வாளா போய் மறியா நரகின் மறிவாரே. (௬௬)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருக லம்பர்களர் நின்றி யூர்மிழலை வல்லம் வேதிகுடி சே ய்ஞலூர், மறைசை காசிதிரு நாவ லூர்கையிலை மயிலை கற்குடி நல் லூர்நணு,— வருணை பஞ்சநதி திங்க ளூர்பனசை யதிகை யொற்றிதிரு நாரையூ, ரால வாய்திருநெல் வேலி வஞ்சிபழை யாறை கச்சிதிருவா தவூர்,—சிரபு ரங்கமலை முல்லைவாய்சுழிய திருவ ரத்துறையு மேபுகார், திருவ லஞ்சுழிந ளாறு வேதகிரி தில்லை மாணிகுழி யாதியாய்,— விரவு கின்றபதி பலவி னுங் குடிகொள் விமலன் வந்துதன தருளினால், விமல சங்கரியொ டுறையும் வெங்கைநகர் மேவு வாரமர ராவரே. (௬௭)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆவியி னிடத்துற் றெம்முகப் பகையென் றம்புயத்தினைப் பிடித் திழுப்ப, மேவுவெண் பற்சொர் பகையெனு மணிகள் வெருவிவந் தடியின்மேல் வீழக்,காவியங் கருங்கட் பகையெனு மளிகள் கலங்கியெண் டிசைதொறு மிரியப், பூவையர் மகிழ் வுற் றுலாவுறும் வெங்கை புரத்தனெங் கருத்தன்வே றிலையே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இளையும் புனற்செஞ் சடைமுடியுங் கடுவார் மிடறு மிள மதியம்,புரையுங் கனலி மருப்பொளிருந் திருமார் பகமும் புலி

யதள்கு, ழரையுங் கரியின் றலைமிதித்த வழகார் வெங்கை யர ன்றுளு, நிரையுஞ் சுரர்கண் டுருவணைத்து மருளே யென்ன நினைவாரோ. (௯௯)

நேரிசைவெண்பா.

நினைகுவதுன் கோலமே நெஞ்சத் தடியேன்
புனைகுவதுன் செங்கமலப் பொற்றுள்—வினவுவது
கோவே யெனவிண் குழாம்புகழும் வெங்கைநகர்த்
தேவே யுனதொழிவில் சீர். (௧00)

திருவெங்கைக்கலம்பகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

தனிச்செய்யுள்கள்.

பதினுன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விற்ற தார்கலை பாதி யோடுவ னத்தி லேயழ விட்டதார், வெஞ்சி றைப்புக விட்ட தார்துகி லுரிய விட்டுவி ழித்ததார்,— சுற்ற தாரமும் வேண்டு மென்றினி மன்னர் பெண்கொள லொண்ணுமோ, வுமிய டாமண மென்ற வாய்கிழித் தோலை காற்றிலு ருட்டடா,—வெற்றி யாகிய முத்தி தந்தருள் வெங்கை மாநகர் வேடர்யாம், விமல ரானவ ரெமைய டுத்தினி தெங் கண் மிச்சின்மி சைந்தபின்,—பெற்ற வேலர்த மக்கு யாமொரு பெண்வ ளர்ப்பினி லீந்தனம், பெற்ற பிள்ளைகொ டுப்ப ரோவி தென் பேய்பி டித்திடு தாதரே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துளங்குமொளித் திங்கடனை யம்புலியென் றுலகமெலாஞ் சொல்லக் கேட்டும், பளிங்கனைய வயிற்றினது விழுங்கியமான் புறத்தோன்றப் பார்த்துங் கெட்டேன், னிளங்கொடிய புலியி தென வறிந்திலே னறிந்தேனே லென்பட்டாலுங், களங்கனி மா மிடற்றிறையைத் திருவெங்கைக் காவலனைக் கைவிடேனே.

இவ் விருசெய்யுட்களும் பிரதிகடோறும் இருக்கின்றன.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கையுலா.

காப்பு.

நேரிசைவெண்பா.

நாவலர்தம் வாய்வீதி நாளு முலாவருமே
தாவருநம் வெங்கையிறை தன்னுலாப்—பாவெனுமோ
ரம்பொற் றளிபூண வாழத் தகப்பட்ட
கும்பக் கடாக்களிற்றைக் கொண்டு.

தலவிசேடம்.

க பூமேவு செம்மற் புகழ்வடிவங் கொண்டன்ன
பாமேவு மங்கைபுகழ் பண்பினா—னேமேவு
வில்லிற் கருந்தடங்கண் மேவுஞ் சிரியநுதல்
வல்லிக் கிடங்கொடுத்த வண்மையினா—னல்லிமலர்
யாணர்த் தவிசி னெகினவர சின்றளவுங்
காணக் கிடையாத கங்கையான்—மாணப்
பொருவரிய பூங்கட் பொறியரியாற் சென்று
மருவரிய நற்றாண் மலரான்—விரவுசடைக்
ரு கானிருக்க விவ்வீர்ங் கதிர்க்கியைபென் னென்றுமறி
மானிருக்குங் கைத்தா மரையினான்—யானிருக்குங்
காயத் திருப்பதுபுன் காரேனக் கொம்போவென்
றேயப் பிறையிருக்கு மீர்ஞ்சடையான்—றூயமுக்

கண்ணுமெழின் மூக்கொடுவார் காம்புபுணர் கூவிளமென்
வண்ணவிலை காட்டும் வதனத்தா—னண்ணல்
வழுவை யடர்த்து வயங்கொளெறி பத்தர்
மழுவை யுவக்கு மழுவான்—பழவடிமைக்
கண்ணனையுஞ் சில்லோர் கடவுளெனத் தன்னுடம்பைத்
தெண்ணவழ னஞ்சயின்ற வெம்பிரான்—பெண்ணுருவம்
பெற்ற வருளொடும்போய்ப் பெண்வலைப்பட் டுற்றதுய
ரற்ற வறிஞ ரகம்புகுவோன்—முற்றவிரி
தத்துவமென் றூறுந் தாங்கடந்து போயறத்தி
லெய்த்தவர்க்குக் காட்டு மியல்பினன்—முத்தமணி
யாற்றிற் பொருதிருவா ரூர்க்குளத்தி லன்றுசென்று
தோற்றப் புரியுந் தொழிற்சித்த—னேற்றுங்
கணையைமல ரொன்று கருதா மதனைத்
துணையை விடுத்தெரித்த தோன்ற—லணையும்
பிறப்புக் கிறப்புப் பெருமருந்து செய்யுங்
குறிப்புக் கரியமுது குன்றேன்—சிறப்பப்
பெரியவரைச் சங்கம் பெறப்பந்தி சேர்த்து
விரிய விலைமுன் விரித்து—வரிசைபட
வன்னம் படைத்துமிசை யாங்கிடுவ விட்டருத்தி
மன்னும் பழுக்காய் வரவளித்துந்—தன்னந்
துறைபடுநர் சென்னியிற்றன் றேழமைவான் கங்கை
பொறைபடாநன் றேறல் புரிந்து—முறைபடுமிம்
மண்ணின்மேல் வெற்பு வளமுடையே மிம்மடவார்
விண்ணின்மேல் வெற்பதுநா மேவுவமென்—றெண்ணி
கொங்கைக் கலவைக் குளிர்சந் தழித்தலைத்துக் [மேற்
கங்கைப் புனலைக் கடுத்தெழுந்துங்—கங்கைக்குத்
தாணு யகமென்று தானதனு லெஞ்ஞான்று
மானுவினைக ளழித்திட்டு—மானுகக்

கோடுங் கழையுங் குடவளையும் விண்முகடு
நாடுங் கழையு நளினமலர்க்—காடுங்
கொடுத்த மணிபலவுங் கொண்டு தனக்கிங்
கடுத்த பெயரை யளித்தும்—படைத்த
பழகு புகழிப் படிமுழுதும் போர்ப்ப
வொழுகுமணி முத்தா றுடையான்—முழுகுபவஞ்
சிந்தும் * விவசித்துச் செய்பணிக்குக் காரணமாய்
வந்துமுத னின்றெழுங்காய் வன்னியா—னெந்தை
௨௫ யருந்தவர்க ளென்று மமரரென்றும் பேரிட்
டிருந்தவர்க ளெல்லா மிரப்பப்—பொருந்தி
முனியா தவர்க்குவர முற்றுங் கொடுத்திங்
கினியார் வரவென் றிருப்பா—னினையாமல்
வேத வுணவு வெறுத்துப் புகழ்மூவ
ரோதுதமி ழூணுக் குழல்செவியான்—றுதையிகழ்
காலிற்குத் தக்க கணிச்சிகைச் சண்டிசொரி
பாலிற்குத் தக்க பழமலையான்—சாலிக்குக்
கைக்கரகத் துற்றிழியுங் காவிரிபோற் சென்றுநாளுஞ்
செக்கரிதழ்த் தாமரையின் றேன்பாய—வக்கமல
௩௦ வேடு கனலா யிடுபசும்பொ னொண்பொகுட்டாய்
மூடு கரியரியாய் மொய்த்ததடம்—பீடுபெற

---

* கோசலநாட்டிலே மணிபிங்கலநகரத்திலே அந்தண குலத்தினுதித்த விவசித்தென்பவர் வறுமைமேலீட்டால் எங்கு முழன்று வருங்கால், ஒருவனத்தில் ஒரு தெய்வீகச்சுனையில் மூழ்கி, அங்கே குபேரனது தங்கையாற் கிடைத்த ஆபரணங்களைக் கைக்கொண்டு, ஒருகணநாத ருணர்த்தியவாறே விருத்தகிரியை யடைந்து, அசரீரியின்படி உரோமசமுனிவரநுக்கிரகம்பெற்று, அருந்தவம்புரிந்து பழமலைநாதர் கட்டளையின்படி அவ்வாபரணங்களை வைக்கப்பட்ட வன்னிவிருக்ஷம் வேண்டியபொருளுபகரிக்க, அரிய திருப்பணி பலவும்புரிந்து சிவபதமடைந்தனர். இதன்விரிவை விருத்தாசலபுராணத்துட்காண்க.

ஞாலங் கருதுஞ்செஞ் ஞாயிற் றிரும்பகன்மால்
கோலங் கருதுங் குளிர்பொழில்வாய்க்—காலங்
கருதி யிருளிருப்பக் கட்செவிமா ணிக்கம்
பரிதியென நின்று பருகக்—குருதிபுரை
சேயொளிய பூண்மணிசூழ் திண்சுவர்முற் றுங்கவரின்
வாயி றெரிபளிக்கு மாடமுறத்—தூயசுதை
மாடநம் பிக்கு வழிவிடுவான் விண்ணெழுந்து
நீடு புனல்போல நின்றிலங்கப்—*பாடநக
ரிந்திரனுக் கன்றிங் கெனக்கென்று வேளசைத்த
பைந்தழைய தோரணம்வின் பாலசைய—வந்தணையி
னாயகனா னீக்குதுயி னங்கை விளக்கவிப்ப
மேய மணிப்பூண் விளக்கேற்றச்—சேயிழையார்
முன்றிற் றுகண்மாற்ற மொய்குழலிற் பூந்தொடைக
† ளன்றிக் துகளா லதுநிரப்ப—மன்றிற்
கொழுநன்சொன் மாதுகிளி கூறு தடக்கப்
பழகுமயற் பூவை பகர—வெழிலி
மறைத்திருந்து செல்லமணி மாளிகையை வேத
முறைத்திருந்து தீப்புகைபோய் மூட—நறைத்திருந்து
செந்தா மரைநா தன்றேரிற் பதாகையொடு
நந்தா மதிற்கொடிக ணட்பாடப்—பந்தாடு
மங்கையர்கள் செங்கை வளையொலிப்ப வேர்மலியும்
வெங்கை நகரிருப்பு வேண்டியே—பங்குபடு
பெண்ணாசை நம்பிபசும் பொன்னாசை பெற்றவுள
மண்ணாசை தானு மருவுதலால்—விண்ணாசை
கொள்ளுஞ் சிறப்புக் கொடுப்பத் திருவுளங்கொண்
டெள்ளுங் குறியவுரு வின்றுபோய்த்—தெள்ளுங்

---

* பாடமைகாவிந்திரன் என்றும்பாடம்.

† அன்றுதல் - பகைத்தல்.

கனவு நனவுபோற் காட்டி யிரந்து
மனைவியுமை யோடுமணந்து—வினவினர்க்குப்
பண்டை யறத்தின் படிவமிது வென்னவுருக்
கொண்டவிலிங் கையன் குலமைந்த—னுண்ட
படிதாங்கி மாயன்றேர்ப் பார்தாங்கி யாங்கெங்
குடிதாங்கி நல்லிசைமென் கோதை—முடிதாங்கு
கல்வியுறுநீல கண்டன் றுணைவனலர்ச்
செல்வி யுறையுந் திருமார்பன்—வல்விரகம்
பூண்ட மடந்தையரே பொல்லா னெனுநல்லான்
றூண்டு திகிரிச் சுமைதுறந்தான்—யாண்டு
மிலையென்றல் கேட்பவுமின் னுதென் றிரப்போர்
நிலைகண்டாங் கெப்பொருளு நேர்வோ—னலையுண்டு
பாலாழிக் கின்றுநிலை பான்மதிக்கென் றொப்பிகந்து
தோலா துலகனைத்துஞ் சூழ்புகழான்—மேலாய
செங்கமல வாணற்கே செந்நாவின் மேவுதல்வெண்
மங்கையெனு மவ்வுரையை மாற்றியே—சங்கையற
மூவுலகு ளோர்க்கு முதுசீர்த்தி வெண்மங்கை
நாவுறைய வைத்த நலத்தினான்—றேவிகலி
வந்துதன்சீர் பாடுநனை மண்மீதி லந்நிலையே
யிந்திரன்று னுக்கு மியல்பினா—னிந்தையற
வுண்டு பணையலரென் றெண்காவைக் கீழ்ப்படுத்திக்
கொண்டு புனாதீர் கொடையினான்—கண்டுபுகழ்
பண்பு மலாது பயனும் புணர்ந்துநிதித்
தண்பதுமம் வென்ற தடக்கையான்—வண்புலவர்
தம்மைவிழி காக்குந் தகவி னிமைபோலச்
செம்மைபெறக் காக்குஞ்சீருடையான்—மெய்ம்மைபெற
நல்லா ரொருவ ருளரே யவர்பொருட்டா
லெல்லார்க்கும் பெய்யுமழையென் றமுனஞ்—சொல்லாடு

மைய மகல வகிலமெலாந் தற்சுட்டிப்
பெய்யுமழை யென்னும் பெயராளன்—றுய்ய
மறையோர் மிடிப்பகைஞன் வாய்மைரா மென்று
மறையோ மெனப்பொய் யறைவான்—முறையோதி
வேலியறஞ் செய்ய விளைத்துக் கரும்பயிலக்
கூலி கொடுக்குங் குலத்தோன்றன்—மாலிரவு
மார்த்தி விருந்தா லடையாக் கதவழகு
மாத்திரையாய் நின்றொளிரும் வாய்தலான்—பூத்தபொ
ளேதப் படாம லிருந்துதவ நல்லறமென் [ரு
பூதப் படியுட் புதைக்கின்றோன்—வேத
னிலம்பெயர்த்து வைத்த நெடுவேரிற் சென்னி
குலம்பெயர்த்து வைத்த குணத்தான்—றலம்படைத்தோ
கண்ட குலத்திற் கருதி னிரட்டியாம் [ன்
பண்ட குலத்தின் பயனானோன்—மண்டலிகர்
நல்லகோ லின்று நவைக்கோ லெனச்செயுங்கோல்
வல்லகோ லண்ண மலைவள்ளன்—மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழப் புதவணித்தா—முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி—மையுள்
ளிருந்தபுன் மாக்கடமை யென்றுந் துதியா
வரந்தரவென் முன்னின்ற வள்ளல்—வரைந்தவிடை

ப வ னி.

தன்மதியி லென்றாழ் தனதுமதி காட்டியுறப்
பொன்மலியுங் கம்பம் புகவேற்றிச்—சொன்மலியு
மிந்திரனு மேனோரு மேத்தத் திருவுலா
வந்தருளு நல்விழவுண் மற்றொருநாட்—சந்தமறை

முன்னூல் வடிவுகொடு முந்நூல் புனைந்தன்ன
பொய்ந்நூ றருமறையோர் போந்தெள்ளி—னெய்ந்நூறு
மாமஞ்ச ணெல்லி வருமானைந் தையமுத
மேமந் தருநெய் யிளவெந்நீர்—தேமுந்து
வில்வநீர் கர்ப்புரம்பால் வெண்டயிர்செந் தேன்கரும்பின்
செல்வநீர் பல்கனியின் றீஞ்சாறு—நல்லிளநீர்
சந்தன மென்பனிநீர் சங்கப் புனன்முதலா
வந்தன கொண்டுதிரு மஞ்சனத்தோ—டுந்துதிரைக்
கங்கை நிறந்திரியக் கன்னிப் பிறைதிகைப்பப்
பொங்கி யலைத்துப் புறம்போந்து—செங்கயல்கள்
பாயுந் தடமாப் படர்சடைமீ தாட்டியபி
னேயுங்கற் பான்மலைமா னெள்ளாத—மாயும்
புலியுரி மாற்றிப் புனைமணிய பாம்பின்
மெலியுரி யன்ன துகில் வேய்ந்து—வலிகெழுநற்
பஞ்சவ னென்ன முடிசூட்டிப் பார்வைக்கீழ்ச்
செஞ்சுடர்ப்பொற் றட்டிற் றிலகமுமிட்—டுஞ்சனிகர்
காதிற்குந் தோளிற்குங் கண்டமணிப் பூணென்னச்
சோதிக் குழைகள் சுமப்பித்து—வாதிப்பி
லுண்ட வழனஞ் சொழுகிப் பரந்ததெனக்
கண்ட முழுதுங் கருஞ்சாந்து—கொண்டணிந்து
பொன்னனையார் நெஞ்சியங்கப் பூங்கலவைச்சேற்றிலிடுங்
கன்னிரைபோன் முத்தவடங் கைபுனைந்து—தந்நிகர்பைந்
நாக நினைவுவர நாறு மலர்த்தாம
மாக முழுது மணிந்திட்டுப்—பாக
மதிய மணியிழைத்து வைத்தன்ன செம்பொற்
புதிய மதாணி புனைந்த—நிதியவணி
மாத்திரைதா னன்றி வளைவடிவுங் காக்குமெனச்
சேர்த்தினர்கே யூரந் திகழ்வித்துச்—சாத்தியபூ

ணென்ன மழுமா னியைந்த விரலல்ல
மன்னமணி யாழி மலிவித்துத்—தன்ஞெழியக்
கைசெய்த வீரக்குக் கட்டியதாய் முற்றுமன்
மொய்செய்த காலன் முரன்முருக்கி—மைசெய்த
மேனி யரக்கன் விறலோர் கணத்தழித்து
வானி னடுத்த மதிதேய்த்துத்—தானுடைய
வென்றிக் கணிந்ததென வீரக் கழனென்று
ளொன்றிக் கிடப்ப வொளிர்வித்து—மன்றற்
புகைமுதனின் றேந்திநறும் பூங்குவளைத் தீப
வகைமுதல கொண்டுபணி மாறித்—தகைமை
வலக்க ணிடப்பா லிடக்கண் வலப்பாற்
கலக்க நிழலாடி காட்டி—நிலக்கலமும்
பொற்கலமு மன்ன மறையும் புகழ்மூவர்
சொற்கலையு மொத்துத் துதிப்பவிருந்—தற்கதிர்தன்
னங்கந் திரண்டமுத தாரையொழுக் கானதெனத்
தங்கு மணிப்பிடிய சாமரைக—ளங்கசையச்
சாந்தாற்றி பேர்முரணித் தாமரைமுத் தன்னவெயர்
போந்தாற்றி ஞாங்கர்ப் பொலிவெய்த—வேந்தாற்றற்
பிள்ளை மதியினைமுன் பெற்றெடுத்த தாய்மதிபோல்
வெள்ளை மணிக்கவிகை மேனிழற்றத்—தொள்ளைவளை
யொன்று யிரம்வா யொலிக்கு மவைபோன்று
சென்று யிரமெண் டிசைவிழுங்கக்—குன்றுத்
திரண்டா யிரங்கை தெழிக்குமது போற்கை
யிரண்டான் முழவொன் றிரங்க—மருண்டார்நன்
னந்திகரங் கொண்டதென நற்றன் னுமைமுழங்கச்
சந்தமறை யோன்விழையுந் தாளங்கண்—முந்ததிரக்
கண்ணன் மலர்வாய்க் கழையெறிந்து பின்றொடர
வண்ணவிசைக்குழல்கள்வாய்த்தொலிப்ப—மண்ணியங்க
ளேனையபா தாளத் திறையரவும் விண்ணரவும்
வானுருமே றென்ன மலிந்தார்ப்ப—மீன

வலைப்புதல்வி போற்றுபெரி யம்மைப் பெயர்கொண்
மலைப்புதல்வி தன்கொழுநன் வந்தான்—றுலைப்பின்
முதுகுன்றம் வெங்கையென முன்னுங் கருணை
மதகென்ற கண்ணுடையான் வந்தா—னிதுகுன்ற
மென்னு மழவிடையான் வந்தா னெனக்கோடி
சின்ன மமுதஞ் செவிக்குகுப்ப—மன்னுசிவ
செந்துவர்வாய் மங்கைபங்க தேவாதி தேவவென
வந்திகர்நின் றார்க்குமொலி வானளப்பப்—பந்திமணி
மாடக் கரைசேர் மறுகிலஞ்சி மன்பதையா
நீடப் புதுநீர் நிறைந்தொலிப்ப—வாடச்
சிலர்செந் தழற்கொழுந்து சேட்போய் விழல்போற்
பலர்செந் துகிலெறிந்து பற்ற—மலர்சிந்தி
யும்பர்மே னிற்ப வுலகநெருக் காலுயர்த்த [னெடுந்
தம்பதுமக் கையெளிதிற் றாங்குவிப்பச்—செம்பொ
தண்டுமிசை கொண்டு சகமீன்ற டன்னையுடன்
கொண்டுமணி வீதி குறுகியே—பண்டு
சிலையாகி நொய்துபட்ட நீதகல மேரு
மலையாகி நின்றவா வந்த—நிலையாகி
நாரணனாய் விண்ணுயர்வா னன்னிறத்தாற் செங்கமல
வாரணனாய் மிக்க வணியினால்—வாரணனாய்
நின்ற பசும்பொ னெடுந்திருத்தேர்க் கண்டுவந்து
மன்ற விளங்கதிர்போல் வந்தேறி—வென்றிதரு
* தந்தி முகன்முருகன் சங்கரிநற் சண்டியிவர்
தந்த மரபிரதந் தாங்கடவ—வந்தணையக் [ஞ்ச
கட்டளைக்கற் பொன்னுரைபோற் காற்பொன் மறுகுரி
முட்டிமுடிப்பொன்விண் முகடுரிஞ்சப்—பட்டுடைத்
[தேர்

---

* தந்திமுகன்முதனஞ்சண் டியீறாயினோர் என்றும்பாடம்.

கண்டோர் விழிகள் களிப்ப நிலைபெயர்த்துத்
திண்டோ ளிறைவன் செலுத்துதலும்—பண்டோர்

துழாங்கள்.

சிரந்துணிந்தா னுடைமர்ப்பச் சென்மதற்கு வேத
னிருந்து படைத்தபடை யென்னத்—திருந்திழையார்
முற்றினர்முற் றுத முலையிற் பெருவாழ்வுஞ்
சிற்றிடையி னல்குரவுஞ் சேர்ந்துளார்—முற்று
மமைக்கு நிகர்தோ ளணங்கா தலைத்தம்
பிமைக்கும் விழியா லிறுப்பார்—சுமைக்கு
வருந்து நுசுப்பென்று வாணுதலிற் றீட்டுந்
திருந்து திலகஞ் சிதைப்பார்—பரந்தஞிமி
றூதித் திரியும் பலமலரி னுண்மணம்போற்
பேதித் தமையுமிகு பேரழ்கார்—மோதிக்
கிழியா முகில்சிதைக்குங் கேதனப்பொற் றேரோ
னழியா வெரிதீ யழகை—விழியால்
விழுங்கினு ரேது விளையா தினிமெய்
புழுங்கினர் மாலை பொரிந்தார்—செழுந்தரள
மாலை பொடிந்துவிழி வார்நீர் கலந்தொழுகிப்
பாலைமொழி யார்பா ரதிபோன்றூர்—மேலைநாட்
கூற்றை முனிந்த குளைகழலு முப்புரத்தி
னாற்றல் களைந்த வணிநகையும்—போற்றிலராய்த்
தம்மைநோய் செய்த தறுகட் சிலைமதற்காய்
வெம்மை விழியே வியந்திடுவார்—செம்மைத்
தவங்கொண்டோ மாதமையா டன்னழகுகொண்டோ
வெவன்கொண் டிடமளித்ததென்பார்-தவங்கொண்டே
லாக வழகா லளித்த திடமாகிற்
போகவிடே மென்றெதிர்தாம் போகுவா—ராக

மருவு மதினென் மடங்கு பிறைப்பே
ரிரவி தனைமறைப்பி னென்பார்—பரவுறுபீர்
கன்றுபயிர் மேயக் கடாவின் செவியரிந்தாங்
கின்றுதலை வற்கா ணிணைவிழிக—ணன்றிருப்பக் [க்குச்
கொங்கை யழகழியக் கொண்டதென்பார் கொல்பவர்
சங்கரனென் னும்பேர் தகாதென்பார்—மங்கையுமை
கொங்கைவடுக் கண்டுங் குழியவுரம் பாயாத
வெங்கண் முலைக்குவலி யில்லென்பார்—செங்குதலைப்
பிள்ளைப் பழியாளர் பெண்பழியை யஞ்சுவரோ
வெள்ளத் தனையேனு மின்றென்பா—ருள்ளுக்
குருகுவார் நெற்றிபுடைத் தோவிதியே யென்பார்
பருகுவார் போலிறையைப் பார்ப்பார்—முருகுவாய்
தங்கமுத மும்பெறுர் தாழ்குழலிற் பூப்புனையா
ரெங்கள் விழிக்கிவர்தாம் யாரென்பார்—பங்குவரு
மார மணிமார் பணியக் கிடைத்தாலும்
பார முலைக்கலம் பற்றுமோ—நேருகினுங்
கங்கையறி யாமற் கலக்கு மிமையமலை
மங்கையறி யாமல் வருவரோ—மங்கை
யறியாமற் கங்கை யணையு மவரென்
னெறியால் வராரொன்று நிற்பார்—குறியா
விணைவிழியா னேக்கா ரெனினு நுதன்மே
லிணைவிழியா னேக்கினுமா மென்பார்—கணைவிழியா
ரேந்திளங் கொங்கை யிடைவருத்தன் மாத்திரையாய்ப்
போந்தன வென்று பொருமுவார்—நாந்தவஞ்செய்
தில்லோ மதனு லினையாம லென்செய்ய
வல்லோ மெனத்திகைத்தார் மற்றொருத்தி—நல்லோர்

* பேதை.

பொதும்பர் வனம்யாம் புகுவோ மிவடான்
பெதும்பையா முன்னமெனும் பேதை—குதம்பை
விழிமேவுங் காதுதோன் மேவப் புனைவாண்
மொழிமேவும் வீணை முனிவாள்—பழிமேவுங்
† கல்லார் பரன்முற் கரத்தல்போற் றன்கண்மூ
யெல்லார் முனுங்கரந்தே னென்றிருப்பாள்—பொல்லாத
வெம்பு பகையாகி மேல்விளைவ தோராம
லம்புலியை வாவாவெனவழைப்பாள்—செம்பொனுயர்
தெற்றிமிசை மென்னடைய தென்றல் வரவேற்றுச்
சற்றுமுள மஞ்சாது தங்குவாள்—பற்றுதவு
தன்பெருமைபெர்ன்னறியாத்தன்மைபோற்பெண்ணரசா
தன்பெருமைதானறியாத்தன்மையாள்—பொன்பரிவி [ந்
றொக்கலையிற் கொள்ளி ஞெளிர்பொன் மணியிருப்பிற்
றக்கவளல் லாரொடுக்கத் தக்கிலாள்—மிக்க
வடிவழகுக் கேற்ற மணவாளன் றானெப்
படியுளனென் றாராயும் பண்பாண்—முடிவி
லுருவழிந்த வேளை யுரியனெனக் கூறும்
பொருவழிந்த வோர்குறையும் பூண்பா—டிருவழங்கு
பொன்னேயெழின்முளையேபூங்கொடியேபெண்ணரசே
மின்னே மயிலே விழிமணியே—யன்னே
வருக வருகவென வாராது தாய்நெஞ்
சுருக வுருக வுழல்வாள்—பெருகறிஞர்
நெஞ்சம் புரைய நிகழ்வுற் றொருசிறிதும்
வஞ்சம் புகாத மதர்விழியா—டுஞ்சி

---

* ஐந்துமுதல் ஏழுவயதளவும் பேதை.

† கல்லார்பரன்முன்னர்க் கரத்தல்போற் றன்கணமும்
என்றும்பாடம்.

விழுந்த கதிரோ யெழில்போல் விழுந்த
தெழுந்ததென வொக்கு மெயிற்று—ளழுங்கவுர
மீக்கா ணளவும் வெளிப்படா வுட்பகையை
நோக்காது வாழு நுசுப்பினாள்—சேர்க்காமன்
மாதரழுக் காற்றால் வடிவிழிவு காணாமற்
பேதை யெனவிகழும் பெண்பெருமாள்—காதலுளந்
தள்ளத் தமர்போற் றமரலா ரும்மகண்மை
கொள்ளக் கருதுங் குறியினாள்—பிள்ளைப்
பருவத்தா லொத்துப் பகல்விளக்குப் பட்டாங்
குருவத்தா லொவ்வா ரொடுதான்—றெருவிற்போய்ச்
செங்கணெடு மாலுந் திசைமுகனு மீசனெனப்
பங்கமொழி கூறும் படியென்னச்—சங்கம்
பழிக்கும் வழுச்சொற் பதர்சேர்த்து வைத்த
விழுக்குங் கவியென்ப தென்னக்—கொழிக்கும்
புழுதியளைந் தில்லமெனப் போற்றிவிரற் கோல
மெழுதிவினை யாடி யிருக்கும்—பொழுதிலிசை
வேதச் சிலம்பு மிளிர்பதத்தான் மூவெயிலுங்
காதச் சிலம்பு கரங்கொண்டா—னாதப்
பணையா னறிய பசுந்துழாய் நாக
வணையா னறிய வரியான்—றுணையா
யடியவரைக் காக்கு மருளான் பனைக்கைக்
கொடியவரைக் காக்குங் கொலையான்—கடிகொள்
பனியிதழி மாலைப் படர்சடையான் வெற்பின்
கனியிதழி மாலைக் கழியா—னினியநறுங்
காவிக் கரிய களத்தினா னெம்முடைய
வாவிக் கரிய வமுதானான்—பாவித்
தருகு மகத்தை யுவப்பா னிகழ்வா
லருகு மகத்தை யழிப்பான்—பெருகு

முருப்பவள மாய வொருவ னிரதி
விருப்பவள மாய விழித்தான்—பொருப்புவளர்
மங்கைக் குழையாய் மழுத்தனக்கென் றேந்துவோன்
சங்கைக் குழையாச் சமைத்தபிரான்—வெங்கைப்
பழமலையா னாளும் பதியிலான் சீற்ற
மெழமலையா னாளு மிறைவன்—றொழுமலையான்
வாழி யரம்பையர்தாம் வண்டலயர் பேதையராப்
பூழி யெழுந்தளகம் போய்ப்படிய—வாழிநெடுஞ்
செம்பொற் கொடித்தேர் திருமறுகி னூர்ந்துவர
வம்பொற் கொடிகுறுகு மன்னையரோ—டும்பர்க்
கரியா னெதிர்சென் றவர்தாழத் தாழ்ந்து
பெரியா னிலைசிறிதும் பேதை—தெரியாம
லன்னைமீ ரித்தே ரமர்பவன்யார் மைந்தனிது
பன்னுகவென் றுடைமுதல்பற்றுதலு—மின்னனையார்
வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதுந் துணிவுபோற்—றற்பதத்தா
லோதும் பிரமமொரு தானென்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினேன்—சாத
மிவட்குநா மேதென் றியம்புவமென் றெண்ணித்
துவக்கும் வினைவழியாற் றோன்று—மெவர்க்குமிவன்
றந்தையே யன்றித் தனையனு காதவன்கா
ணந்தமில்சீர்க் காரைக்கா லம்மைதனை—முந்தொருநா
டப்பா வருளாற் றனக்கம்மை யென்றவன்கா [ட்
ணப்பா வெனுமொழியு மன்பினாற்—றப்பா
ரயிலேர் மகன்மாட் டறிந்தவன்கா ணெங்கண்
மயிலே யெனவுரைப்ப மற்றும்—வெயிலே
ரிழையா ளிவனா ரெவனுரையு மென்ன
வுழையா ரிவனூர்நம் மூர்தா—னழையாய்

விளையாட..வென்று நகைத்து விளம்ப
முளையா முலையிளையாண் மோகங்—கிளையாள்
படிவ னணிநன்கு பார்த்தா டவழு
முடியி லிளம்பிறையு முன்னுள்—வடிவழகன்
கையி லிளமானுங் காதலியா ளெம்பெருமான்
மொய்யகலம் வேய்ந்து முருகுயிர்க்குஞ்—செய்ய
கடுக்கையினைப் போதே கருத்தூழ் நடாத்த
மடக்கொடியிவ் வீசர்தோண் மாலை—யடுத்தெனக்கு
வாங்கி யுதவுமென மைக்கண் கலுழ்ந்துருகத்
தீங்கிலுமை பங்கன் றிருவிழவுள்—யாங்களிளம்
பேதையென வைப்பப் பெதும்பைச் செயலுமலான்
மாதிவளோர்மங்கைசெயன்மன்னினுள்-யாதினியாஞ்
செய்யுஞ் செயலென்று சிந்தித் துளங்கலங்கிப்
பெய்யுஞ் சிறுவளைக்கைப் பெண்ணமுதே—யையன்
றிருத்தார் நினக்கிரத்தல் செய்தும் புனைதற்
குரித்தா முலைவந் துரத்திற்—பருத்தாலென்
றோதிக் கலுழ்கை யொழித்தா ரிவளன்று
பேதைப் பருவம் பெறுகையா—லாதிப்
பெருமான் விடுத்தகன்றான் பேரருளாற் பாகத்
தொருமா னிவட்பார்த் துவந்தாள்—பொருமார
னூறடுத்த கோடி நுனைப்பகழி கொண்டாலு
மாறிவட்கென் செய்வான்வறிதகன்றான்-வேறொருத்தி

---

* பெதும்பை.

சீர்க்கு மிளைஞராந் தேன்முரலும் போதாகப்
பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள்—யார்க்குந்
தனைக்காணில் வாய்நீர் தரும்புளியி னுண்மா
றனைக்காணி னல்குமொரு தைய—னனைக்காம

---

* எட்டுமுதற் பதினொருவயதளவும் பெதும்பை.

முள்ள மரும்ப வுணர்வுடைய யோகிகட்கும்
கள்ள மரும்புகயற் கண்ணினாள்—கொள்ளுந்
தகவையிரு பங்காக்கித் தாமிருப்பக் கண்கண்
முகவினடு விட்டசுவர் மூக்காண்—மிகவும்
புரிந்தநெடுங் கூந்தற் பொறைவருமுன் னாணல்
வருந்துநறுஞ் சந்த வளையா—டிருந்த
௧௯௫ மனங்குழைக்கும் பெண்வளர்த்தான் மானக் குதம்பை
கனங்குழைக்குநல்கும்வார்கா தாண்—முனங்குழைக்கு
மண்விடுத்துப் பூசு மணங்குழைப்பாண் முன்பிறழ்ந்த
வெண்விடுத்துச்செவ்வனியம்புவாள்—பெண்விடுத்துப்
பூமங்கை யாணவாம் பொற்பினாள் கல்விகொடு
பாமங்கை தாளிற் பணிகுவாள்—காமன்றன்
வல்லியிவள் போலுமவள் வாட்போலுங் கண்ணினள
வில்லைபுகுந் தாயி னெனப்படுவாண்—மெல்ல
விடையபிரா தாழி யெழுங்கதிர்முன் றோன்று
முடிநுனிபோற் றோன்று முலையா—ளடியழகு
௨௦௦ பூழி யழிப்பப் புறந்திரியா டற்போற்றுந்
தோழியர்நூ றுயிரவர் சூழ்ந்துவரக்—கேழி
னிலைய வுறப்பு நிகரா தவற்றின்
வலைய மலைப்ப மனங்கொண்—டிலகிலஞ்சி
சென்று புகுந்தவளர் சில்லோதி தன்பகையா
மென்றுநெடும் பாசி யிடையொதுங்க—மன்றனறுங்
காவிவிழி கண்டுகுப்பக் கண்ணீர் குழைபகைத்த
வாவிபடர் வள்ளை யடிதுடக்கத்—தாவிதழ
வாம்பன் மலர்வா யதுகண்டு வாய்திறப்ப
*மேம்பல் வளைகழுத்தால்வீழ்ந்தொளிப்பக்—கூம்பன்
௨௦௫ முகைகண்டு தாழ முலையை முழந்தாட்
பகைகண்டு ஞெண்டளைகள் பார்ப்பத்—தகைகொண்டு

---

* மேம் - மேன்மை. செய்யுமென்னும் எச்சமுமாம்.

வாய்ந்தகணைக் காற்கு வராலிரியத் தாட்புறக்குப்
போந்த கமடம் புறங்காட்டக்—காந்தளுடை
தன்னெதிர்கஞ் சஞ்சிவந்து சாயாது நிற்பக்கை
யந்நிலையிற் கொய்தாங் கதுபற்ற—மின்னனையா
ளாடவரோ டாடினா ளாகப் புனலாடி
மாட மணிமறுகில் வந்துறலு—நீடு
கரும்பு மலரும் கலந்துவிழை வாக்க
விரும்புமதன் போன்மூலை வீதி—திரும்பிப்
உ௪0 பரிதிநெடுந் தேர்வருதல் பார்த்தவக லல்கு
லிரதியெனத் தானுமெதி ரேற்றாள்—கருதி
னரிய நுதற்க ணரசையருள் காட்டுங்
கரிய மிடற்றமுதைக் கண்டா—ளுரிய
விறைவற்குத் தக்காங் கிறைஞ்சினா ணூலின்
முறைமுற் றிரத முதல—குறைவற்ற
மல்கு விழவார வாரத் தகப்படா
தொல்கு மருங்கு லுமைமங்கை—புல்குந்
திருத்தோளிற் கண்வழிதன் சிந்தைபோய்க் காம
வெரித்தோற்ற மெய்துறுமவ் வெல்லை—யுருத்தோர்
உ௪௫ பெருநாண் டடுத்துப் பிணைவிழியு ணீருங்
குருநாண் மலர்க்கைக் குருகு—மரநா
ணகல்கின்ற வல்குலிற்பட் டாடையுநிற் பிக்கப்
புகல்கின்றா ளிம்முளரிப் பூவைப்—பகல்குன்றச்
சோதி தருமிவற்குச் சூட்டியக்கான் மற்றிவன்றா
னேதுதரு நல்கு மெனக்கென்ன— * வோதி
பெருகொருத்தி சென்றருகு பெண்ணணங்கே யின்பம்
பருகற் கிரண்டாம் பதமா—மருகிருத்த
லீந்தருளு மென்ன விறைவி யருகிருப்பு
வாய்ந்த முதற்பதமா வைத்தெண்ணிப்—போந்த

---

* ஓதி - அறிவு.

மனக்களிப்பு மல்கிமலை மாதையஞ்சி யீசன்
றனக்களிப்ப வெண்ணுமலர் தன்னை—நினக்களிப்ப
னென்ன வவடா னிவண்மனம்பே தித்ததெனுக்
கன்ன லனையமொழிக் காரிகையே—பொன்னிரத
மங்கை முலைகளோ வள்ளறடந் தோள்களோ
விங்கிவையி னல்ல வியம்பென்ன—வங்கவளுங்
கூறுது தன்கடைக்கண் கோமான் புயத்துறுப்ப
வேறுன துள்ளமெனன் மெய்யென்று—தேறுக்
கொலைமாலை வேற்கணுட் கொண்டுமட மாதர்
நிலைமாட வீதியய னீங்கச்—சிலைமாரன்
கிட்டிக்கொண் டெந்தைமுன்செல் கின்றவிநாயகற்குக்
குட்டிக்கொண் டெய்யநாட்கொண்டகன்றான்-சுட்டிக்
[கொண்
டொப்பாக வோதற் கொருபொருளு மில்லான்றே
ரப்பான் மறுகி னடைந்ததா—லிப்பால்

---

* மங்கை.

இலர்போ லவாவி யிசையளிக ளுண்ணுண்
மலர்போன் மலர்செவ்வி மங்கை—யலர்போ
தலைமங்கை செய்யா ளறவுங் கரியாண்
மலைமங்கை சாலவுமென் மங்கை—கலைமங்கை
வெள்ளை யவட்கருத வேண்டா வெனுமங்கை
கள்ளை விடுத்துமதங் காண்மங்கை—கிள்ளைமொழிச்
செந்திருமென் கொங்கை திருமா றிளைக்குங்காற்
புந்திதனிற் கொள்ளும் பொலிவினு—ளிந்திரன்றன்
னுக்கத் தினைவிழையா வாற்று மருந்தவங்க
ணீக்கித் தனைநினையு நீர்மையாள்—சீர்க்கமல

* பன்னிரண்டுமுதற் பதின்மூன்றுவயதளவும் மங்கை.

வாதிய்யன் மீக்கூ ரரம்பையரை யாக்குங்கான்
மாதிரிகை யாகவுநும் வாய்ப்பினுள்—சோதிமணி
யன்று சுடரோன் றமைந்த மனைபுகினுங்
கன்று தளிர்மெய்க் கவினுடையா—ளின்று
திருத்தேர் விழாவென்று சேடியர்க ளீண்டி
மருத்தே ரளிசூழ் மலருந்—திருத்தே
ரிழையுந் துகிலு மெனைத்துங் கொணர்ந்து
விழையும் படியணிய வேண்டக்—குழையு
மனத்தொடுமென் றூசு மணிமே கலையா
மினத்தொடு சேரவுடுத் திட்டுச்—சனித்தவிட
முற்றுங் கவரா முகிண்முலைமுன் றூனையான்
முற்றுங் கருணைகொடு மூடினாண்—முற்றும்
புருவவணி மாருப் பொருவிழிக்கு மையிட்
டுருவ மதியை யுவந்து—மருவுமொரு
பைத்த நெடியுகரும் பாம்பென்னப் பின்னுபுமுன்
வைத்த குழலின் மலர்புனைந்தாண்—மொய்த்தபுக
பூசற்குத் திங்களொன்றே யென்றுகதி ரும்பிறையும்
வாசக் குழன்முன் வகுத்தணிந்தா—ணேசத்
திலக மதிக்கிழிந்த சிற்றரவ மென்ன
விலகமணிச் சுட்டிபுனைந் திட்டாள்—கலகமிடக்
கண்ணிற்கு வேள்விடுத்த வோலையெனக் காதிற்கு
வண்ணப்பொன் னோலை வதிவித்தா—ணண்ணி
முயங்கு முரோணி முழுமதியோ டென்ன
வயங்குகொடி மூக்கார மாட்டி—யுயங்கியய
லேனை மதிமாத ரெல்லா மிருப்பதென
வானமணி மாலைகழுத் தார்வித்தாண்—மானவனை
காக்க மணிப்பொற் கடகங் கரஞ்செறித்துச்
சேக்க வடியிற் சிலம்பணிந்தா—ணேக்கமுத

மன்னா ளொழிந்த வணிபலவுந் தாங்கினாள்
பொன்னா லியன்றவுருப் போன்றமைந்தாள்—பின்னா
ளுருப்பசி யன்ன வொருத்தி யளிப்பக்
கருப்புரமென் பாகு கவுட்கொண் —டிருப்பவொரு
மாது குறுகி மயிலேபொற் றேரோடுநம்
வீதிதனில் வந்தான் விமலனென—யாதும்
வருவதுண ராமன் மகிழ்ந்தெழுந்து நங்கை
பொருவதரும் வீதி புறப்பட்—டுருவதிலி
யுற்றபெருந் தானையென வுண்கண்ணு மொண்கவுளும்
பற்றுபுகர் வாளும் பரிசையுமா—முற்றிழையா
ரெண்ணிலா ரீண்டி யிருமருங்கும் போற்றிவரத்
தண்ணிலாவேணியரன் றன்னெதிர்போ-யண்ணன்மே
வண்டு மலரென்னும் வார்சிலையி னேர்தொடுத்துப் [ல்
பண்டுமத னெய்த பரிசென்னக்—கொண்டு
விலங்க விழிப்பகழி விற்புருவ மேற்றி
யிலங்க வருமிறைதோ ளெய்தாள்—கலங்கலரு
மண்ணறான் யோகநிலை யன்மையாற் றன்பரிதிக்
கண்ணினா னோக்கவெரி காமத்தீ—யொண்ணுதலா
ளாகநீ றாகா வளவுபோய்ப் பற்றுதலும்
போகமார் மாலை பொடிந்தொழியப்—பாகவாஞ்
சொல்லாள் பணியுட் டொலைந்தன வன்றியுள
வெல்லா முருகி யிலையாக—நல்லா
ரிதுவந்த தெம்மா லெனவுள்ள மாழ்கி
மதுவந்த கொன்றையந்தார் வள்ள—லெதிர்வந்து
நின்று தொழுவா னினையிங் கியாங்கொணர
வென்று மறியா விடும்பையெலா—மின்றிவட்குத்
தந்தா யுலகியல்பு தானுமலாற் புன்மாலை
வந்தால் வருத்தும் வளர்பிறையை—யந்தோ

உசு0 சுமந்துவந்தீப் போதே சுடுவித்தா யீது
னமைந்த திருவருளுக் காமோ—சமைந்தவொரு
கோதை யுனையாள் குழலிசைய வண்டுறலான்
மேதைதரு கல்யாணர் வேண்டுதலாற்—போதுபல
பூத்த வவயவமாம் பொற்பினா லூறினிமை
வாய்த்தமையான் மாறா மணத்தினாற்—சீர்த்திபுனை
நின்றிருத்தோட் கேற்ற நிலையா ளணைந்தருளா
யென்றுரைத்து வேண்டுதலு மெம்பிரா-னன்றடுத்த
பங்குமையையஞ்சிப்படர்சடையில்வைத்தொளித்தாங்
கங்கையினை யிவ்விருவர் காணும—லெங்கிவளை
உசுரு நாமொளிப்ப மென்னா நடாத்தினான் பொற்றிருத்தேர்
காம னடுத்துக் கணைமாரி—கோமளப்பொன்
வஞ்சிமிசை தூர்த்து வருந்திக்கை விட்டகன்றா
னஞ்சனவேற் கண்ணா ளவட்கப்பாற்—கஞ்சம்

* மடந்தை.

அடங்கு பொகுட்டி னமர்திருவிற் கோடி
மடங்கு கவின்கூர் மடந்தை—நுடங்கு
கொடிமின் னொழுக்காக் குளிர்புயன்மே னின்ற
படிமன்னு கூந்தலுடைப் பாவை—தொடிமன்னு
செங்கைக் குமாரவேள் செவ்வேலை யொப்பாக்கச்
சங்கப் புலவர்க்குத் தானுரைப்ப—வங்கடுத்து
உஎ0 மாரவே ளம்பாக்கின் வார்புருவக் கென்சிலையு
நேருமே யென்னா நெடுங்கண்ணாள்—சீருலாங்
காரளகம் வின்னுதல்வேற் கண்குமிழ்மூக் கூசல்கா
தாரமெயி றும்பலித ழாடிகவுள்—வேரறேள் [டை
காந்தளங்கை யோதிகொங்கை காயமிடைவாழைதொ
மாந்தளிர்செந் தாளென்று மாதரெனப்-போந்தவர்க

* பதினான்குமுதற் பத்தொன்பதுவயதளவும் மடந்தை.

ளெல்லார்க்கு மொப்ப விசைப்பவற்றை யொப்பாக்கல்
பொல்லா தெனவுயர்ந்த புத்தமுத—மில்லாமன்
மாதவர்கண் மால்கொள்ள மால்கொண்ட பெண்ணுரு
யாதுமழ கில்லை யெனவந்தாள்—கோதி [வும்
றுறவறமொன் றுண்டென்று சொல்லுமுறை தற்கண்
ணுறுமளவு மென்னு முருவாள்—பொறியரவு
மந்தர வெற்பு மறிகடலு மின்றமுதந்
தந்தருளும் செவ்வாய்த் தளிரியலாள்—செந்திருவோ
டொத்தக லாத வுயிர்ப்பாங் கியைவிளித்து
முத்த மணல்பரந்த முன்றில்வா—யித்தலையில்
வென்று * ளுடைந்தாள் விரிபசும்பொற் பூண்கொள்க
வென்றுள் பொருந்தி யிளந்தளிர்க்கைக்—கன்றுடக்
காமர் மணிமே கலைகலிப்பப் பூணொலிப்பச்
சேமவிடை யின்றென்று தேராத—தாம
முலைமேற் றுகிலுடங்க முண்டகச்செம் போதிற்
சிலைமேற் சிறுவியர்வு சேரத்—தலைமேற்
சுரும்பரெழுந் தார்ப்பத் துகண்மாலை தூர்ப்பக்
கருங்குவளைக் கண்பிறழ்வு காட்டப்—பெரும்புவியின்
முந்தடித்துச் செல்வ முறையாற் றொடர்வதென
வந்தாத்து மங்கை யடுத்தெழுவான்—பந்தடித்துப்
பூவை விளையாடும் போதி லொருமூவர்
பாவை விழையும் பழமலையான்—கோவை
யெழுதுந் திருக்கரத்தா † னெய்யாமல் வேத
முழுதும் புகழு முதல்வன்—றொழுதுந்
துதித்து முழுநாட் டொலைப்போ ருளத்தான்
விதித்து வருமோர் வினையுந்—திதித்தொழிலுந்

---

* உடைந்தாள் - தோற்றவள்.
† எய்யாமை - அறியாமை.

கொள்ளுமவ ரோடுலகங் கோறற் றெழில்புரிந்துந்
தெள்ளுமரு ளாண்மை சிதையாதா—னுள்ளுமறை
கற்றும் பிறனைக் கடவுளென்பார்க் காண்கைமுதற்
குற்றம்பொறுத்தெனையாட் கொள்ளுவான்—முற்றுந்
தனக்கடிமை யென்னுமாற் றம்பிரான் பூட்கைச்
சினக்கடிய வேழவுரிச் செல்வன்—மனக்கினிய
துங்க மணிநெடுந்தேர் தோன்றுதலும் வல்விரைந்து
நங்கைவரிப் பந்தொடும்போய் நண்ணினு—ளெங்கள்
கருத்தனைமுன் கண்டாள் கருநெடுங்கண் ணீரோ
பருத்த முலையின் பசப்போ—தெரித்தமலர்ப்
பைந்தெரிய லின்புலர்வோ பல்வளைக டுஞ்செலவோ
வந்துவளர் நாற்குணத்தின் மாய்தலோ—முந்தியதிங்
கேதோ வறியோ மிவையெலா மெய்தினுள்
காதோ டமர்செய் கயற்கண்ணுண்—மாதோர்
புறத்திருப்பக் கண்டுதான் புல்லியமேற் சேறன்
மறுத்தடுத்தோர் சூழ்ச்சி மனத்துட்—குறித்து
நினக்குவென்றி யாயி னினக்கே யிவர்தோ
ளெனக்குவென்றி யாயி னெனக்கே—யினக்கரியுங்
கோடாத நின்பாற் கொழுநனே யென்னுடைபந்
தாடா யெனவுரைப்ப வப்பாங்கி—யோடா
வணங்கே யெனைப்போ லவளைமதித் தாய்கொல்
லிணங்கே ருனக்கொவ்வா ளேனுங்—குணங்கூ
ரிறைவி யலளோ விதுதகுமோ வென்ன
மறைவி யலனிவ் வழக்குப்—பெறவிவ்
விருவர்க்கு மோது மியர்கைத்தன் றென்னு
வுருவக் கொடிநெடுந்தே ரூர்ந்து—விரைவிற்
றிருத்து மிவள்பொற் றெருக்கடந்து சென்றான்
வருத்துமத னுண்டொழிய மற்று—மொருத்தி

* அரிவை.

தருமுத்தி வேறென்போர் தாமுந்தற் சேர
லருமுத்தி யென்னு மரிவை—யொருமுத்தி
வேண்டியுகங் கோடி விளைத்த தவங்கொடுத்துக்
காண்டலுந்தற் கொள்ளக் கருதுவா—ளீண்டிமதி
நள்ளிருள்சென் றுச்சி நணுகிற் குழலொடொவ்வா
வொள்ளெழில் வாண்முகத்தோ டொப்பாவாள்-விள்ள
நேர்ந்த விளைஞருறு நெஞ்சியங்கு மாறென்ன [லற
வார்ந்தநெடுங் கூந்தல் வகிரினாள்—சேர்ந்த
கயலிரண் டொத்துக் கடைசிவந்து நாப்ப
ணயலிருண்டு வெண்ணிறத்த வாகி—மயல்புரிந்து
நீண்ட வடிவகன்று நேர்வள்ளை மீதோடிக்
காண்டகைய வாயினிகர் கண்ணினா—ளேண்டுசுட
ரன்ன மணிக்குழைக ளஞ்சனவேற் கண்டள்ள
மன்னவிருந் தாசேல் வார்செவியா—டன்னு
ணிலவை விரித்தொடுக்கி நிற்குங் குமுத
மலருளதே லொக்குநகை வாயா—ளிலகவரி
மூன்றெய்தி யொள்வளைவெண் முத்து வடமாகக்
கான்றெய்தி னொக்குங் களத்தினா—ளீன்றெய்து
மாந்தளிர் முன்னாள் வரையன்றி யொவ்வாத
வேய்ந்தொளிர்பல்வளையமென்கையா—ளேந்திடைமே
லேயு மிருவா ரெழிலொருவா மிக்கவலி
வீயு மெனவெழுந்த வெம்முலையாள்—காயமெனப்
பொய்கூறியவறியேம் புண்டரிகத் தாளிழையின்
செய்கூறென் றெண்ணவுள சிற்றிடையாள்—மைகூர
நேர்ந்த வெறும்புகுழி நின்றெழல்போ லுந்திமிசை
வார்ந்த வுரோமமெனும் வல்லியினாள்—கூர்ந்தமணி

---

* இருபதுமுதல் இருபத்தைந்துவயதளவும் அரிவை.

நேமி வளைகொ ணெடியோன் திருவுந்தித்
தாமரையை வென்றிகழுந் தாளினாள்—சோமமுடி
காண நடக்குங் கருத்தாற் பறந்தவன்ன
நாண நடக்கு நடையினாள்—வீணை
கரங்கொண்டு செம்பவளக் கான்மணிமா டத்து
வரங்கொண்ட பொற்றவிசின் வைகி—மரங்கொண்ட
கோடு குழைந்து குழைப்பச் சிலைவன்மைப்
பாடு குழைந்து பழமாகப்—பாடு
மிசையால் விளர்ப்பெஞ்சா தெய்துகலை மான்கை
யசையா வியவா வயர—நசையா
னரம்புமொழி கற்க நவிற்றுங் குருவி
னிரங்கு மிசைபாடி யேற்றி—விரும்பமுத
மன்னா ளிருப்ப வவள்பாங்கி சென்றுமலை
முன்னா ளுருக்கு முனிநிகர்வை—யிந்நா
ளசையா தடுத்த பழமலையை யன்ன
மிசையா லுருக்குவா யென்ன—விசையா
வெளிய திதுவென் றிசைவீணை யோடு
மளிய னெதிர்சென் றடைந்தா—ளொளிகொண்
மதியூர் முடியு மனாமே வடியுங்
கதிர்வேல் விழிகளிப்பக் கண்டாள்—கொதியா
வெருவுறுப்பச் சென்று வெருவுற்றாங் கென்னே
மருவுறுக்குங் கொன்றை மலையை—யுருகுவிப்பச்
சார்ந்தாள் பழமலையாற் றானே யுருகுற்றாள்
சோர்ந்தாள் விழியருவி தாங்கினா—டேர்ந்தாண்
மொழிகற்ற வீணை முறையென்ன வீழ்ந்து
பழியற்ற தாளிற் பணிய—வொழிவற்ற
கோல்வளைக டோற்றாள் குவிமுலைகள் பீர்பூத்தா
னால்வகைய பண்பு நழுவினாள்—சூல்வளையி

ஞெந்தா ளதுபாங்கி நோக்கி யருண்மலைமுன்
வந்தாடன் யாழான் மகிழ்வித்து—நந்தா
விசைபெறுவா னெண்ணி யிழந்தாண் முதலுந்
திசைபெறுவான் வந்தெழுந்து தீரா—வசைபெறுவா
னின்று ளெனக்கொண்டு நில்லாது போயினாள்
குன்றாத வன்பினொடு கூடவே—நன்றாரு
மானாய னார்த மரியவிசைக் கல்லாமற்
கானார் மலர்க்குழலாள் காமமொடு—தானாரு
மின்னிசைகேட் டுள்ளுருகற் கிம்மலைதானம்மலையோ
வென்னிசையச்சொல்கென் றெடுத்தியம்பிப்-பொன்ன [விர்செம்
பூண்டயங்கு மென்முலையா ரேனையர்பின் போயினார்
காண்டகுநம் வெங்கைநகர்க் காவலா—னீண்ட
கருமா லுலகங் கடந்தான்றன் கண்க
டிருமா மலரென்ற றேற்றம்—வருமாறு
தொள்ளா யிரத்துத்தொண் ணூற்றென்பதொண்மலரு
மெள்ளா விழியொன்று மிட்டவடி—யுள்ளான்
மதனன் மலர்ப்பகழி மாறு மறுகிற்
புதுநன் மணித்தேரிற் போனா—னதனில்

---

*தெரிவை.

இருந்த பதினா யிரவரம்பை மாருட்
டெரிந்துமதன் வைத்த தெரிவை—திருந்த
நடந்தா லரசவன்ன நச்சப்படாத
தடந்தா மரைவென்ற தாட்கு—மடைந்தார்க்கும்
வண்டமை யாது வரியாழ் பயிலாது
தண்டளிர் தோல்வி தருகைக்குங்—கொண்டமணித்

---

* இருபத்தாறுமுதல் முப்பத்தொருவயதளவும் தெரிவை.

கண்ணின் றிருக்குங் கனக மலைவணங்க
வெண்ணின் றிருக்கு மிளமுலைக்கும்—புண்ணின்
றணங்குறுவ தன்றி யருள்புரியா வேலி
னிணங்கெறியு முண்க ணிணைக்கும்—வணங்கி
யொடியும் வரிசிலைநா ணுற்றிருப்ப தென்று
கடியு முரிபுருவங் கட்கு—நெடியமணி
வள்ளைக் கொடிபான் மருவிலகண் ணோட்டமெனக்
கொள்ளைக் கவின்கூர் குழைகட்கும்—தெள்ளுற்
றுவமைகூ றக்கருதி னுன்றற்கொன் றல்லா
துவமைவே றில்லா வுருவா—ளுவமை
கரியகுழ லாகக் கமஞ்சூன் முகிரு
னுரியபொரு ளாக வுரைப்பா—ளரியமலர்
கொள்ளைகொள வெண்ணிக் குயில்கூவ நல்லாய
வெள்ளமொடு சென்றுபொழின்மேவினாள்-கள்ளழியப்
பூத்தகொடி தான்வருமுன் பூம்பணைகண் மீதேற
வார்த்தைகொடு கிள்ளை மருங்கிரியக்—கூத்தனை
வோதி முகில்கண் டுவந்து மயிலாடத்
தீதில் விழிகண்டு தேனினங்க—டாதில்
விழுந்து படிந்துருவம் வேறுகப் பல்வண்
டெழுந்துமலர் வாய்கண் டெதிரச்—செழுந்தரள
வெண்ணகையாள் கண்டு விடுத்துத்தன் மூக்கையெதி
ரொண்ணகையசண்பகங்களுள்ளவெலாம்-பெண்ணரசு
சென்று கவர்ந்துநனி சிக்கயாத் திட்டுமுலை
யென்று பெயரிய * வெற் பேற்றினாள்—மன்றங்
குறுகியிளந் தென்றலெதிர் கொண்டிருப்பச்சேணி
லுறுகொடிய தேர்தோன் றுதலு—மறுகி
னிரம்பு கதிர்நேர் நெருஞ்சியெனத் தன்பாற்
றிரும்புவிழி யாயமொடு சென்றாள்—குரும்பைமிகர்

* வெற்பேற்றிமணற்குன்றம் என்றும்பாடம்.

கொங்கைநீ ணுண்சட் கொடிமென் றளிர்போன்ற
வங்கைநீள் கூந்தலின்மே லஞ்சலித்தாள்—கங்கைநீர்
பாய்ந்துதளி ராது பவள நிறக்கொழுந்திற்
சாய்ந்துபடர் வஞ்சிச் சடையழகும்—வாய்ந்தசிலை
யாக்கங் தருமதவே ளஞ்சத் திலகமென
நோக்கங் கிடந்த நுதலழகும்—பார்க்கும்
விழியாய்க் கிடந்தசுடர் மேல்வா சிகைபோன்
றழியாப் புருவத் தழகும்—பழியாப்
பரசு வருங்கை பழித்தருள்வந் தெய்தி
யரசு செயுங்கண் ணழகும்—வரிசைபடு
தொண்ட ரகத்தமருஞ் சூளா மணிவதன
முண்டகத்துக் கேற்றகொடி மூக்கழகு—மண்டுகருத்
தோடிமலை வேந்த னுலாவமுதுண் டென்கவிப்புன்
காடிமுனி யாதகுழைக் காதழகும்—பீடிசைய
வாத்தமொழி யாக வனைத்தும் பயில்வேத
வார்த்தை மொழியுமலர் வாயழகு—மேத்துறுதன்
னேவ விருக்கு மிமையவர்மேற் சென்றவிடங்
காவ விருக்குங் கழுத்தழகு— *நாவல்
விலங்கலுன் றிண்மை விடுத்து வணங்கு
மலங்கலுழ் திண்டோ ளழகு—மிலங்க
வெடுத்தமழு மானபய மேனை வரத
மடுத்தமல ரங்கை யழகும்—வடித்தகதிர்
வேலு மெனுங்கண் விளங்கிழைகொங் கைத்தழும்பு
மாலு வணியினுறு மார்பழகு—நூலுய
வெண்ணிற் சிறந்த விதழ்மலரா டாழுநெடுங்
கண்ணிக் கணையாங் கவானழகு—நண்ணிக்
குடித்தாவி கூற்றெங் குடிமுழுது மாட்கொ
ளடித்தா மரையி னழகும்—கடித்தாம

---

* நாவல்விலங்சல் - மேருமலை.

மென்முலைகண் ணிற்கு விருந்திட் டமையாது
நன்மணிமுத் தம்புனைய நல்கினாள்—பொன்மலையை
வாரொழுங்கொங்கைபெறும்வண்ணத்தானுங்கடந்தா
போரெர்ழுகும்வேளர்ப்பொலிவழிந்தாள்-சிரொர்முகு[ள்
மைத்தமணி கண்டன் வதனத் தொடுவதனம்
வைத்துமுலை வேழமலை மார்புபொர—நெய்த்தகுழன்
மாது தழுவ மனங்கொண்டு பித்தனையச்
சூதுபொரு சந்தமுலைத் தோழிமார்—மூதுலகி
லாடவர்க டம்மி லழகனு மாயோனும்
பீடமையு மைத்தடங்கட் பெண்ணுருவாய்க்—கூட
விருந்த பெருந்தகையை யெங்குலப்பெண் வேட்டு
வருந்தறகு மென்று மதித்து—விரைந்து
மனையிற் கொடுபோய் மலரணையிற் சேர்த்த
வினைவுற் றயிருண் டிலையென்—றனைவர்க்கு
மையம் விளைய வவள்சோர்ந்து பின்றெளிவுற்
றய்யும் வகையே தரைமினென்று—ளைய
னுருவெளியைக் கண்டா ளுழையரைச்செல் சென்று
ளருவெளியைப் புல்கி யயர்ந்தாள்—பொருவெளிய
ரல்லரா மாத ரறிஞர்க்குத் தாமல்ல
தில்லரா யாண்டு மெதிர்நிற்க—வல்லரா
மீச ரிவட்கு மெதிர்நின்று ரென்றிருப்பப்
பாசமில ஞதி பகவன்றேர்—வாசவன்முன்
முன்னிறுத்த வஞ்சிறகர் மூரிவரை யூர்வதெனத் [தி
தன்னிலைப்பொன்வீதிதனிற்சார்ந்ததாற்-பின்னொருத்

---

*பேரிளம்பெண்.

கண்ணிற் சிறந்த கருமணிபோல் வானவர்தம்
பெண்ணிற் சிறந்தவொரு பேரிளம்பெண்—விண்ணிற்

---

* முப்பத்திரண்டுமுதல் நாற்பதுவயதளவும் பேரிளம்பெண்.

குருமதிதா னொக்குமெழில் கூர்முகத்தை யொக்குந்
திருமலரி னுண்மலர்வு தீர்த்துப்—பொருமதர்வாட்
கண்ணொக்கு நீலக் கடிமலரை வாழ்விக்கப்
பண்ணொக்கு மின்சொற் படியிலாள்—விண்ணிற்
இருசுடரின் மற்றொன் றெழின்முகமொவ் வாம[வேன்
லொருசுடர்மன்பொற்பழிப்பவுள்ளாள்—பொருசுடர்
மாவடியை நோக்கி வரலொத்துக் காதளவுந்
தாவடிபோய் மீளுந் தடங்கண்ணாள்—காவடிபோற்
கண்ணுங் குழைதூங்கு காதுமுறத் தாங்குநரி
னண்ணுங் குமிழ்வென்ற நாசியா—ளெண்ணு
முலைமுதல வெல்லா முறையொத் துவமைத்
தகைதவிர முற்றுந் தனத்தாள்—பகைமலரி
னுற்றமட வாரு ளொருவரே கல்விகவின்
பெற்றிடினன் றெவ்வாப் பெருமையாள்—பொற்றகடு
வேய்ந்தபவ ளக்கால் வியன்மா ளிகையொன்றி
லாய்ந்த புராணநூ லந்தணனை—வாய்ந்த
மடங்கலணை யுய்த்து வணங்கி மருங்குற்
றடங்கலாூர் தீமூட்டு மண்ண—ரொடங்குகதை
யொன்றோ துகவென் றுரைப்பவவ னோதுவா
னன்றோர் பகன்முக்க ணண்டகைதான்—குன்றோ
டிணங்குமுலைப் பெண்ணாத லேலாமை யின்மா
லணங்குருவப் பெண்வடிவ மாகிக்—கணங்கொண்
முனிவர் தவமிழந்து மோகிப்பான் செல்ல
வனையர் மகளி ரமர்ந்த—மனையிற்
பலிமுகத்தா னாகிப் பலிக்கெய்த வானம்
புலிமுகத்தா ரெம்மான்முன் போந்தார்-கலிமுகத்துப்
புன்றரும்பு போன்றலைந்தார் போற்றுமவிகாரிமுனஞ்
சென்று வருசொற் றிரிதல்போன்—மென்றளிரா

மேனி திரிந்தார்கை வெள்வளைகள் போக்கினர் [போ
வேனின் மதன்கணையால் வெய்துயிர்த்தார் - பானுரை
லாடை குலைந்தா ரணைந்தாவி தாரீரென்
றேடவிழ்பூந் தாண்முன் னிறைஞ்சினர்—நீடழலிற்
காட்டு மரக்கிற் கருத்துக்கா ரென்னவுயிர்
கூட்டுண் மலர்க்கட் கொடியிடையாள்—கேட்டு
மடவார்கட் கெல்லாம் வசைவிளைத்தா ரென்றச்
சடைவா னவன்றனென் றன்பா—லடைவானே
ணுவனகர் நம்பிபெரு நன்மணப்பூம் பந்தரிடைப்
பாவலர்முற் கூறும் பழிமொழியை—யாவர்களுங்
கூற வெருக்கணிந்த கோல முதவியா
வேறமடன் மாவையெளி தேற்றுவலென்—றூறமுத
மன்ன மொழியா லறைதலுமுக் கட்கனிமுற்
சின்ன முனிமகளிர் சிந்தைகவர்—தன்னனையான்
வந்தா னெனமுழங்க மாதெண்ண முற்றியதென்
றந்தா மரைத்தா ளணிசிலம்ப—முந்தா
விறைவனெதி ரேற்று ளெழிற்பெருக்கங் கண்ணுற்
குறைவ தறமுகந்து கொண்டாள்—கறைமிடற்றுப்
பண்ண வனைமொழிந்த பாவ முடன்பலித்து
வண்ணநறுந் துசு * வளையொழியக்—கண்ணிணையு
ணீர்பெருக நெஞ்ச நிறையழிய மென்முலைகள்
பீர்பெருகச் செவ்வாய் பிழைபிதற்ற—வேர்பெருகு
மாதவர்த மாதருற்ற வாறுமின்றிக் கையாற்றிற்
சாதலுறு வார்போற் றனைமறந்தாள்—கோதையா
டானே பழமலையைச் சார்ந்தசைப்பாளென் றுமொழித்
தேனே யெனுஞ்சொற் றிருமுகத்தில்—வானோர்
தனிநா யகன்முடியிற் றண்புனலீ தென்று
பனிநீர் தெளித்தளிப்பப் பாவை—முனியா

* மறையொழிய என்றும் பாடம்.

ளுணர்ந்தவச நீங்கி யொழிந்தாள் வளைகள்
புணர்ந்த முலைபசலை பூத்தாள்—கொணர்ந்த
தொடைபொடிப்ப வெண்டரளஞ் சுண்ணம் படமெய்
யிடையடுத்தார் நீங்குவெதுப் பேற்றாள்-சடையடக்கக்
கங்கைநீ ரன்றேயிக் கண்ணீ ரெனவழுதாள் [யர்கள்
பொங்கெரியின்வீழ்பறவைபோன்றினைந்தாண்-மங்கை
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயலென்று—மெல்லியலைக்
கொண்டு மனையிற் குறுக மலருண்டு
வண்டுபடுங் கூந்தன் மலர்விழியாள்—பண்டு
திருமாலு நான்முகனுந் தேடும் பொருளைக்
கருமா மிடற்றெங் கரும்பைப்—பெருமானைத்
தெள்ளமுதைத் தெய்வ சிகாமணியைத் தன்னடியா
ருள்ளுயிரைத் தோன்று வறுதுணையைக்—கள்ளவிழுங்
கொன்றைப் பவளநெடுங் குன்றைப் பழமலையை
மன்றிற் குனிக்குமொரு மாமணியைச்—சென்றுற்
றுளத்துப் புணர்ந்துவிடா தோங்கின்ப முற்றாள்
இளத்தற் கரியபெருங் கீர்த்தி—வளத்தொடுறு
காடு நிலைநிற்ப நம்பன் செலுத்தப்போய்
நீடுதிருத் தேர்நிலையி னின்றதா—லாடு
படைக்கண் மகளிர் பலரிவ்வா றுகக்
கடைக்க ணருள்சிறிது காட்டிச்—சடைக்கண்
ணிலாவினுன் வெங்கை நிலையினு னாதி
யுலாவினுன் போந்தா னுலா.

நேரிசைவெண்பா.

பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
வோதை யெழுகடல்போ லோங்கினார்—காதலுறச்
சிந்தா மணிநெடும்பொற் றேரிற் றிருவுலாத்
தந்தான் பழமலைநா தன்.

சிறப்புப்பாயிரம்.

வெங்கைப் பதிப்பழய வெற்புக் கணிமுழுதுந்
தங்கத் திருவுலாச் சாற்றினான் — சங்கத்துப்
போற்றுந் தமிழ்நூல் பொதுக்கடிந்தா னென்றுலகஞ்
சாற்றுஞ் சிவப்பிரகா சன்

திருவெங்கையுலா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

௨

பிழையுந் திருத்தமும்.

பிழைகளைதிருத்திக்கொண்டேபடித்தல் நலம்.

பக்கம்.	பாட்டு.	எண்.	பிழை.	திருத்தம்.
௧0	குறிப்பு	௪	முறண்	முரண்
௩0	௮௭	,,	,,	பாண்
௩௩	௧௭	௨	கையிலை	கயிலை
௩௪	தனி	௫	ருட்டா	ருட்டடா
௩௮	௩௭	௧	ளன்றிக்	ளன்றித்
௩௯	௪௯	௨	மூடிதாங்கு	முடிதாங்கு
௯0	௩௩௮	௨	மணித்	மணிக்